TO SHARE THE LIGHT

# தீபகச் சுடர்

ஏப்ரல் 2024

தீபம் 12 சுடர் 11

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

## வாககளிபபது நம் கடமை!



# தீபகத்திலிருந்து **இறையாசீர்**



*அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,*

**"சீசருக்குரியதைச் சீசருக்கும்,
கடவுளுக்குரியதை கடவுளுக்கும் கொடுங்கள்"
(லூக். 20:25)**

சனவரி 25, 2019ஆம் ஆண்டு நாம் "தேசிய வாக்காளர்கள் தினம்" கொண்டாடினோம். 2011ஆம் ஆண்டு சனவரி 25ல் தேசிய தேர்தல் ஆணையம் ஒன்றை நிறுவியது. (ECI) இவை யாவும் இந்திய மக்களாகிய நாம் அனைவரும் நம் கடமையை அறிந்து வாக்களிக்க வேண்டும், அதை ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காக செய்தது. உண்மையில் இந்தியாவில் அதன்பிறகு வாக்காளர்களின் சதவீதம் சற்று கூடியிருந்தது. இந்திய வாக்காளர்கள் தங்கள் கடமையையும், உரிமையையும் அறிந்து இந்த தேசிய கடமையை எவ்வித பயமுமின்றி, துணிவுடன் நிறைவேற்றவும், நம் சனநாயக கடமையை ஆற்றவும் இவ்வாணயம் உறுதி கொடுக்கின்றது.

கடந்த காலங்களில் இந்திய வாக்காளர்கள் இந்த சனநாயக கடமையை சரிவர செய்யவில்லை என்பதே வருத்தமான உண்மை. இன்னும் 80 சதவீதத்திற்கு குறைவானவர்களே வாக்களிக்கின்றனர். அதுவும் வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவர்களே இந்த கடமையை செய்கின்றார்கள். பல கோடி மக்கள் அவரின் பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்கிறதா? அல்லது இருந்தும் போய் வாக்களிக்கின்றனரா? என கேள்வி கேட்டால் உண்மையில் மிகவும் வருத்தப்பட வேண்டியதாகும். இதில் ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர், புலம் பெயர்ந்தோர் என பலர் இந்த வாக்காளர் பட்டியலில் இடம் பெருவதில்லை, வாக்களிப்பதும் இல்லை.

சில நேரங்களில் தேர்தலின்போது தங்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருப்பதில்லை, மாயமாக மறைந்து விடுகின்றது. இருந்தாலும் தங்களுக்குப் பதிலாக தாங்கள் வருவதற்கு முன்பே சிலரின் வாக்குகள் போடப்பட்டு இருக்கின்றது. இதற்கு இன்றுவரை யாரும் பதில் சொல்லியது இல்லை. பல நாடுகளில் "ஓட்டுரிமை" என்பது "அடிப்படை உரிமை" நம் நாட்டில் இந்தியாவில் மட்டுமே இது "சட்டப்பூர்வமான உரிமை". இருந்தாலும் இது ஒரு "புனிதமான கடமை". ஏப்ரல் மாதம் 19ம் தேதி, 2024ல் (ECI) தேர்தல் ஆணையம் நம் நாடாளுமன்ற தேர்தலை நம் மாநிலத்தில் அறிவித்து இருக்கின்றது. அனைவரும் வாக்களிக்க வேண்டும் அல்லது ஓட்டு போட வேண்டும் என்று வற்புறுத்த முடியாது. எனினும் ஒரு சில வழிமுறைகளை இங்கு நாம் கடைபிடித்தால் நம் நாட்டிற்கும் நமக்கும் நன்மை உண்டாகும்.

- ☑ 18 வயது அதற்குமேல் உள்ள அனைவருமே கண்டிப்பாக வாக்களிக்க வேண்டும் (அ) ஓட்டு போட வேண்டும். நம் சனநாயக கடமையை நிறைவேற்ற வேண்டும்.
- ☑ ஏதாவது ஒரு அரசியல் கட்சிக்கு நாம் வாக்களிக்க வேண்டும்.
- ☑ நம் நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தை மதித்து, நடைமுறைப்படுத்தி, வெளிப்படையான அரசியல் செய்யும் கட்சிக்கு, ஏழைகளை மதித்து, மனிதநேயத்தை கடைப்பிடித்து, மனித மாண்பைப் போற்றி, சமூக நீதியைக் கடைப்பிடித்து நேர்மையோடும், நீதியோடும் மக்கள் அமைதியுடன் மகிழ்ச்சியுடன் ஒன்றுபட்டு வாழ, சாதி, மத, இன பேதமின்றி எல்லோருக்கும் எல்லாம் சமமாக கிடைக்கவும் வழி செய்யும், நல்ல அரசியல் கட்சிக்கு நம் வாக்குகளை அளித்து, நம் கடமையை நிறைவேற்றுவோம்.
- ☑ அரசியல்வாதிகளில் யார் நல்லவர், ஏழைகளுக்கானவர், கல்விக்கானவர், சுகாதாரத்திற்கானவர், என அறிந்து, பட்டியலினத்திற்கானவர், தாழ்த்தப்பட்டவர், பழங்குடியினரை அன்பு செய்து, அவர்களின் வாழ்வாதாரம் உயர வழிவகுப்பவர் யார் என்பதை அறிந்து அவருக்கு வாக்களிக்க வேண்டும்.
- ☑ அரசியல்வாதிகள் யார் என்பதை அறிந்து, அவர்கள் கடைப்பிடிக்கும் அரசியல் கொள்கை, கோட்பாடு என்ன என்பதை அறிந்து, அவர்களுடைய இலக்கு மற்றும் தேசிய எண்ணம் மற்றும் சமூக அக்கறை இவற்றையும் அறிந்து நாம் வாக்களிக்க வேண்டும்.
- ☑ தேர்தல் வாக்குறுதிகளைப் படித்து, பகிர்ந்து, அவற்றைப்பற்றி பொதுவெளியில் விவாதித்து அவை அனைத்தும் நிறைவேற்றக் கூடியதா? இல்லை "சும்மா" வெற்றுப் பேச்சா? என அறிந்து வாக்களியுங்கள்.

எந்த அரசியல் கட்சி நமக்கானதோ, ஏழைக்களுக்கானதோ, பழங்குடியினருக்கானதோ, ஆதி குடிமக்களுக்கானதோ, மகளிருக்கானதோ, குழந்தைகளுக்கானதோ, சிறுபான்மையினருக்காகவோ, மாற்றுத்திறனாளிகளுக்கானதோ, திருநங்கை/திருநம்பிகளுக்கானதோ மற்றும் மனித உரிமை, நீர், நிலம், காற்று, நல்ல சுகாதாரம், மருத்துவம், கல்வி, உணவு, உலக வெப்பமாதலைத் தடுத்தல், வேலை வாய்ப்பு, உழவுத் தொழில் மேம்பாடு, நாட்டின் பாதுகாப்பு, நல்ல வெளிப்படையான, ஊழலற்ற ஆட்சி, இவைகளுக்கு உத்திரவாதம் தருமோ அந்த கட்சிகளைத் தேர்வு செய்து நம் கடமையை உணர்ந்து பொறுப்புடன் நம் பொன்னான வாக்குகளை முதன்மையாகச் சென்று வாக்களித்து நம் கடமையை நிறைவேற்றுவோம்.

*வாழ்க சனநாயகம்! வாழ்க நம் மணித்திரு நாடு!!*

என்றும் அன்புடன்

அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச

இயக்குநர் - தீபகம்

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


07.04.2024 இறை இரக்கத்தின் ஞாயிறு - திருப்பலி 02

08.04.2024 ஆண்டவருடைய பிறப்பின் அறிவிப்பு பெருவிழா-திருப்பலி 03

11.04.2024 புனித ஸ்தனிஸ்லாஸ் - திருப்பலி 05

13.04.2024 புனித முதலாம் மார்ட்டின் - திருப்பலி 06

14.04.2024 பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு - திருப்பலி 07

21.04.2024 இறை அழைத்தல் ஞாயிறு - திருப்பலி 09

23.04.2024 புனித ஜார்ஜ் மற்றும் அடால்பெர்ட் - திருப்பலி 10

25.04.2024 புனித மாற்கு நற்செய்தியாளர் விழா - திருப்பலி 11

28.04.2024 பாஸ்கா காலத்தின் 5ம் ஞாயிறு - திருப்பலி 13

29.04.2024 சியென்னா நகர்ப் புனித கத்ரீன் - திருப்பலி 14

30.04.2024 புனித ஐந்தாம் பயஸ் - திருப்பலி 15


## பகுதி 2: நம்பிக்கையில் வளர...


அன்னை மரியாவின் அர்ப்பணம் - நமக்குத் தரும் பாடம் 17

இறை இரக்கத்தின் வலிமை - மனித வாழ்வின் வலிமை 19

ஒளியின பாதை திருஅவைச் செய்திகள் 23

திருஅவைச் செய்திகள் 27

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 07.04.2024 இறை இரக்கத்தின் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. ஆ. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. தி.ப. 2: 32-35 II. 1யோவா. 5: 1-6 யோவா. 20: 19-31

அன்பு இறைச்சமூகமே, இன்று திருஅவையானது உயிர்த்த ஆண்டவரின் இரண்டாம் ஞாயிறுக்கு பின்வரும் ஞாயிறை இறை இரக்கப் பெருவிழாவாகக் கொண்டாடுகின்றது. இயேசு பல காட்சிகள் வழியாக புனித பவுஸ்தீனா கோவால்ஸ்காவுக்கு வெளிப்படுத்தி, தன் இறை இரக்கத்தை அகிலமெங்கும் அறிக்கையிடும் இரக்கத்தின் தூதுவராக நியமித்தார். அவர் கண்ட காட்சி வழியாக வரையப்பட்டதுதான் இன்று நாம் காணும் இறை இரக்கத்தின் திருப்பீடம். ஆண்டவரின் அன்பு முடிவுறுவதில்லை அவர் இரக்கம் தீர்ந்துப்போவதில்லை. தன் பாடுகளினாலும், இறப்பினாலும், உயிர்ப்பினாலும் இவ்வுலகின்மேல் இயேசு காட்டிய மாபெரும் அன்பே இவ்விரக்கம். சீடர்கள் கைவிட்டபோது மீண்டும் அவர்களைத் தேடிச்சென்று அவர்களின் பயம் போக்கியது அவரது இரக்கம். காயத்தழும்பின் மூலம் நம்பிக்கையூட்டியது அவரது இரக்கம். இன்று நமக்கும் இரக்கத்தின் ஆண்டவர் தரும் வாக்குறுதி "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்பதே.

"கடவுளின் இரக்கத்தைத் தவிர மானிடரின் வாழ்விற்கு எந்தவொரு நம்பிக்கை ஒளிக்கீறல்களும் இல்லை" என்பார் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால். இன்றைய நற்செய்தியில் "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று உயிர்த்த ஆண்டவர் நமக்கு சமாதானத்தைத் தருகின்றார். அந்த சமாதானத்தைப்பெற "ஆண்டவர் உயிர்த்து விட்டார்" என்று நம்பவேண்டும். அந்த நம்பிக்கையின்மூலம் நாம் ஒற்றுமையாக வாழும்போது சமாதானம் நம்மோடு தங்கும். இன்று நான் என்னுடைய குடும்பத்தில் ஒற்றுமையாக வாழ்கின்றேனா? என்னோடு வாழும் சகோதர சகோரிகளோடு சமாதானமாக இருக்கின்றேனா? என்ற சிந்தனையோடு கடவுளின் இரக்கத்தை ஆழமாய் சிந்திப்போம். நாம் பெற்ற மகிழ்வை , உயிர்ப்பின் சமாதானத்தை மற்றவருக்கும் எடுத்துரைக்கும் நல்ல கிறிஸ்தவ சாட்சிகளாக வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. உயிர்த்த ஆண்டவரே, அழைத்தலின் பணி வாழ்வினை ஏற்று வாழும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரும் பல நேரங்களில் குழப்பத்தோடும், தடுமாற்றத்தோடும் வாழும்போது, நீரே உடனிருந்து வழிநடத்த உம் தூய ஆவியாரின் துணையை அவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று வாக்குறுதி கொடுத்த ஆண்டவரே, நாடுகளுக்கிடையே சண்டைச்சச்சரவுகளும், தீவிரவாதங்களும், போதைமருந்து, கடத்தல், வன்கொடுமை போன்றவற்றை தடுத்து நிறுத்தி உம்பிள்ளைகளாகிய எங்கள் ஒவ்வொருவரையும் உமது இரக்கத்தினால் மன்னித்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. வாடிய மக்களைத் தேடிவந்து தேற்றும் அன்பு தந்தையே, அகில உலக மக்களையும், நாட்டுத் தலைவர்களையும், குடும்பங்களையும் சமாதானத்தில் வழிநடத்தி, உயிர்ப்பின் மாட்சியில் அனைவரும் பங்குபெறும் பாக்கியம் பெற்றவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. இரக்கத்தின் ஆண்டவரே, எங்கள் பங்கில், குடும்பங்களில், சமூகத்தில், உமது இரக்கம் கிடைக்கப்பெற்று அமைதி, ஒற்றுமை, சமாதானம், விட்டுக்கொடுக்கும் உள்ளம், மன்னித்து ஏற்றுக்கொள்ளும் தாராள உள்ளமும் தந்து, உமது உயிர்ப்பில் நாங்கள் உயிர்ப்பெற்றவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 08.04.2024 ஆண்டவருடைய பிறப்பின் அறிவிப்பு பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. எசா. 7: 10-14, 8:10 II. எபி. 10: 4-10 லூக். 1: 26-38

இறையேசுவில் அன்புள்ள இறைச்சமூகமே, இன்று நம் தாயாம் திருஅவை ஆண்டவரின் பிறப்பு முன்னறிவிப்பு பெருவிழாவைக் கொண்டாடுகின்றது. மெசியா வருவார் என்ற எதிர்ப்பார்ப்பும், ஏக்கமும், நம்பிக்கையும் யூத மக்களிடையே நாலாயிரம் ஆண்டுகளாக இருந்து வந்தது. இதை எசாயா இறைவாக்கினர் முன்னறிவித்திருக்கிறார். இவ்விழா கி.பி. 430ம் ஆண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது. கன்னிமரியா கடவுளின் மகனைக் கருவில் தாங்கிய நிகழ்வை சிறப்பிக்கும் இவ்விழா "ஆகட்டும்" என்ற வார்த்தையின் வலிமையை உலகிற்கு என்றென்றும் பறைசாற்றுகிறது. கணவரையே அறியாத ஒரு பெண் கருவுறுவது எப்படி என்ற தெளிவில்லாத நிலையிலும், "கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை என்று நம்பிய கன்னிமரியா, தம்மை ஆண்டவரின் அடிமையாக ஒப்படைக்கின்றார். "உன்னத கடவுளின் மகனை அவர் கருத்தாங்குமாறு கடவுளின் அருள்" அவரில் செயல்பட்டது.

இந்த அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கிய வல்லவராம் கடவுள், எல்லா தலைமுறையினரின் மக்களும் "பேறுபெற்றவர்" என்று போற்றுகின்ற அளவுக்கு மரியாவை உயர்த்தினார். "உமது சொற்படியே எனக்கு ஆகட்டும்" என்ற மரியாவின் வார்த்தைகள், "வாக்கானவரை" கருத்தாங்குகின்ற பேற்றினை அவருக்கு வழங்கியனார்.

புனித தாமஸ் வில்லனோவா பின்வருமாறு எழுதுகிறார். "மரியாவின் ஆகட்டும்" என்ற சொல் "உண்டாகட்டும்" என்று கடவுள் உச்சரித்தபோது, "விண்ணும் மண்ணும் தோன்றியதுபோல ஆகட்டும் என்று சொன்ன நேரத்தில் அன்னை மரியாவும், இயேசுவைக் கருத்தாங்கினார்". தம்மைத் தேர்ந்துக்கொள்ளும் இறைவனை நம்பி இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாழும் அனைவரின் உள்ளத்திலும் இறைமகன் பிறக்கின்றார் என்பதை உறுதியுடன் ஏற்றுவாழ இன்றைய தெய்வீகத் திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வாழ்வின் ஊற்றே எம் இறைவா, எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரும் "உமது வார்த்தையை" தங்கள் உள்ளத்தில் ஏற்று அதற்கேற்ப செயல்வடிவம் கொடுக்க உமது தூய ஆவியானவரின் வல்லமையை நிறைவாக அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

2. பாதுகாப்பளிக்கும் இறைவா, நமது இந்திய நாட்டின் அனைத்து மொழி சார்ந்த மக்களை அரவணைத்து வழிநடத்தும் அரசு மலர்ந்திடவும், எவ்வித பாரபட்சமுமின்றி சலுகைகளைப் பெற்றுத்தரவும் வன்முறைகளைக் களைந்து நல்லதோர் ஆட்சிபுரியும் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தகுதிப்பெற்றவர்களாக மக்கள் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, ஆண்டவரின் பிறப்பின் அறிவிப்புப் பெருவிழாவினைச் சிறப்பிக்கும் நாங்கள் எங்களின் பகைவர்களை மன்னித்து, உமது பிறப்பின் மகிழ்வினை நாங்களும் மற்றவர்களோடு மகிழ்ந்து வாழும் தாழ்ச்சியான உள்ளத்தையும், பகிர்ந்து வாழும் நல்லுள்ளம் பெற்றவர்களாக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. ஞானத்தின் இருப்பிடமே இறைவா, தேர்வினை எழுதி முடித்த, எழுதிக்கொண்டிருக்கும் மாணவச் செல்வங்களை ஆசீர்வதியும். அவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் இத்தருணத்தில் உம்மீது ஆழ்ந்த நம்பிக்கையோடு இருக்கும் உம் பிள்ளைகளின் கனவை நனவாக்கி அதிக மதிப்பெண்களோடு தேர்வில் வெற்றிப்பெற்று ஒளியமான வாழ்வை அமைத்துக்கொள்ளத் தேவையான ஆற்றலையும், அருளையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 11.04.2024 புனித ஸ்தனிஸ்லாஸ் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவின் இனியத் திருக்குலமே, இன்றைய தினம் நமது திருஅவை புனித ஸ்தனிஸ்லாஸ் என்னும் ஆயரை சிறப்பிக்க திருஅவை நம்மை அழைக்கிறது. புனித தனிஸ்லாஸ் போலந்து நாட்டிலுள்ள "ஜெசப்பனா" என்னும் நகரத்தில் கோக்கிரை என்னும் ஊரில் 1030ம் ஆண்டு ஜூலை 26ம் தேதி ஒரு அரசகுடும்பத்தில் பிறந்தவர். இவர் தம் இளம் வயதில் பிரான்ஸ் நாட்டில் ஓர் கன்னியர் நடத்தும் பள்ளியில் படித்து, போலந்தில் தன் மேற்படிப்பை தொடர்ந்து குருமடத்தில் சேர்ந்து ஆன்ம குருவானார். பின்பு "க்ராகாக்" என்னும் மாவட்டத்தில் ஆன்ம குருவாக பணி புரிந்தபோது ஆயரானார். அப்போது அரசராக இருந்த "பொலாஸ்லாஸ்" என்னும் மன்னர் நோய்வாய்ப்பட்டு 1072ல் இறந்தபோது அவ்வரசருக்கு உறவினர் என்னும் முறையில் அரச குடும்ப தகராரை தீர்த்து வைத்தார்.

அரியணையேறிய "இரண்டாம் போலாஸ்லாஸ்" பாவகாரியங்கள் புரிந்தபோது கண்டித்தார். இதனால் கோபமடைந்த "போலாஸ்லாஸ்" நமது புனிதரை கொல்ல ஆட்களை ஏவினான். ஆனாலும் புனிதரைச் சுற்றி ஒரு பேரொளி ஒளிர்ந்ததை கண்டு, கொலைச் செய்ய வந்தவர்கள் அவரை கொல்லாமல் சென்றுவிட்டனர். இதனால் அரசன் தானே சென்று 1079ல் ஏப்ரல் 11ல் திருப்பலி ஆற்றிக்கொண்டிருந்தவரை கொன்றான். இதைக் கண்ட மக்கள் போலந்து நாட்டைவிட்டு அவனை விரட்டி விட்டார்கள். பின் அவன் ஹங்கேரி நாட்டிற்கு சென்று அங்கு ஆசீர்வாதப்பர் மடத்தில் சேர்ந்து மனந்திருந்தினான்.

பின் நமது புனிதருக்கு 1255ல் திருத்தந்தை 4ம் இன்னசென்ட் புனிதர் பட்டம் அசிசிநகரில் கொடுத்தார். சேவைகள் பல புரிந்து போலந்து நாட்டின் பல பிரச்சனைகளுக்கு தீர்வு கண்ட இவரை மக்கள் போலந்து நாட்டின் "பாதுகாவலர்" என்று அழைத்தனர். இப்புனிதரின் வாழ்வை தியானித்தவாறு நம் நாட்டு மக்களுக்காகவும், குடும்பங்களுக்காகவும் இறைவனின் அருளாசிரைப் பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் முழுமையே இறைவா, திருஅவையைத் தாங்கி வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தங்களின் கிறிஸ்தவ பிறப்பின் மேன்மையை உணர்ந்து செயலாற்றவும், இறைவனின் மீட்பு அனைவருக்கும் கிடைக்க வழிவகுத்து செயலாற்றவேண்டிய ஆற்றலையும், சக்தியையும் மற்றும் வல்லமையையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, உமது இரக்கத்தையும், அன்பையும், மன்னிக்கும் மனதையும் பெற்றுள்ள நாங்கள், பிறரை மன்னிக்கும் மனமும், இரக்க உள்ளமும் கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் வள்ளலே எம் இறைவா, பலவிதமான நோயினால் பாதிக்கப்பட்டு துன்பப்படுகின்ற ஒவ்வொருவரையும் நீர் கண்ணோக்கும். அந்நோயிலிருந்து முற்றிலுமாக அவர்கள் குணம் பெற்று, வாழத் தேவையான உமது ஆற்றலையும், வல்லமையையும், தூய ஆவியாரின் ஆசீரையும் நிறைவாக அளித்தருள உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம்.

## 13.04.2024 புனித முதலாம் மார்ட்டின் திருப்பலி

**முன்னுரை** திரு. சாம்சன்

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று புனித முதலாம் மார்ட்டின் அவர்களின் திருப்பலியைச் சிறப்பிக்க நாம் அனைவரும் ஒன்று கூடியிருக்கின்றோம். இவர் கி.பி. 590ம் ஆண்டு டோடிக்கு அருகில் உம்ப்ரியா நகர் கிழக்கு உரோமானியப் பேரரசில் பிறந்தார். அவரைப்பற்றிய வாழ்க்கை வரலாற்றாசிரியர் தியோடா கூறும்போது புனித முதலாம் மார்ட்டின் உன்னதமான பிறப்பையும், அறிவுத் திறமையும், கட்டளையிடக் கூடியவராகவும், ஏழைகளுக்கு பெரும் தொண்டு புரிபவராகவும் இருந்தார் என்று கூறுகின்றார். இவர் 641ம் ஆண்டில் திருத்தந்தை நான்காம் ஜான் அவர்களால் குடிமக்களின் துயரத்தைத் தணிக்கவும், ஸ்வால்களின் படையெடுப்பைத் தடுத்து கைதிகளை மீட்டெடுக்கவும் டால்மேஷியா மற்றும் இஸ்ட்ரியா ஆகிய பகுதிகளுக்கு அனுப்பப்பட்டார். புனித முதலாம் மார்ட்டின் காலத்தில் பாழடைந்த தேவாலங்களை மீட்டெடுக்க புனிதர்களின் நினைவுச் சின்னங்கள் ரோடுக்கு கொண்டுவரப்பட்டன. கி.பி. 649 வரை மார்ட்டின் ஆயராக பணி செய்தார். கி.பி. 649 முதல் கி.பி. 655 வரை திருத்தந்தை பதவி வகித்தார்.

புனித முதலாம் மார்ட்டின் பேரரசர் இரண்டாம் கான்ஸ்டான்ஸ் அவர்களால் கைது செய்யப்பட்டார். பின்பு கான்ஸ்டான்டிநோபிளுக்குக் கொண்டுச் செல்லப்பட்டார். செர்சனுக்கு நாடு கடத்தப்பட்டார். அவர் கத்தோலிக்க திருஅவை மற்றும் மரபுவழி திருஅவை இரண்டிலும் புனிதர் மற்றும் தியாகியாக அங்கீகரிக்கப்பட்ட கடைசித் திருத்தந்தை இவர்தான். உடல் நலக்குறைவின் காரணமாக கி.பி. 655 ஏப்ரல் 13 அன்று அவர் மரணமடைந்தார். அந்நாளை அவருடைய நினைவு விழாவாகத் திருஅவையால் கொண்டாடப்பட்டு வருகிறது. இன்றைய நற்செய்தி வாசகம் நமக்கு கூறுவது என்னவென்றால் இறைவன் நம்மோடு இருக்கும்போது நாம் எதற்கும் பயப்பட வேண்டாம், படகில் சீடர்கள் தத்தளிக்கும்போது அஞ்சாதீர்கள் நான் இருக்கின்றேன் என்று கூறுகிறார். அவர் நம்மோடு இருக்கும்போது புயலோ, காற்றோ, தீமையோ எதுவும் நம்மை அணுகாது.

எப்போதும் நாம் அவருடனேயே இருக்கின்றோம் என்ற எண்ணம் உருவாகும். பாலைநிலத்திலும் இயேசு மக்களுக்கு உணவளித்தார். "ஆம் இறைவனின் ஆசீரை எப்போதும் எந்த எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் மற்றவர்களுக்கு அளிக்கும்போது இறைவன் நம்மை பல நலன்களால் நிரப்புவார்" எனவே இப்புனிதரின் வாழ்வை நாமும் பின்பற்றி இறையேசுவின் அன்பு பிள்ளைகளாக வாழ இத்திருப்பலியில் இறைவனின் அருள்வேண்டி மன்றாடுவோடும்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரையும் உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்கள் மக்களுக்காக செய்யும் பணியில் சிக்கல்கள், பிரச்சனைகள், பாதிப்புகள் ஏற்படாமல், நல்ல உடல்உள்ள நலனளித்து பாதுகாக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அரசருக்கெல்லாம் அரசரே எம் இறைவா, வருகின்ற தேர்தலில் மக்களின் நலனுக்காக உழைக்கும் நல்ல தலைவர்களை நீர் ஆசீர்வதித்து வெற்றிபெறச் செய்யவும், மக்களுக்கு தெளிவான சிந்தனையையும் ஞானத்தையும் அளித்து வாக்களிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. படைப்பின் பரம்பொருளே எம் இறைவா, உம் படைப்பில் குறையொன்றும் இல்லாமல் அனைத்தும் நிறைவானதாக படைத்தீர். உமது படைப்பின் மகத்துவத்தை உணராமல் அதை ஒவ்வொன்றாக அழித்துக்கொண்டு வரும் விஞ்ஞான உலகில் இயற்கையின் அழகை சீர்க்குலைக்கின்றவர்களை நீர் கண்ணோக்கி அவர்களின் மனதை மாற்றியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 14.04.2024 பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

I. தி.ப. 3: 13-15,17-19 II. 1யோவா. 2: 1-5 லூக். 24: 35-48

இறையேசுவில் பிரியுள்ள இறைச்சமூகமே, இனி நான் மன அமைதியுடன் படுத்துறங்குவேன், ஏனெனில் ஆண்டவரே, நான் தனிமையிலிருந்தாலும் நீரே என்னை பாதுகாப்புடன் வாழச் செய்கின்றீர் (தி.ப. 4: 8). பேதுரு மக்களை நோக்கி, நம் மூதாதையரின் கடவுள் தன் ஒரே மகனை பெருமைப்படுத்தினார். ஆனால் நீங்களோ கொலையாளியான பரபாவை விடுதலைச் செய்ய வேண்டினீர்கள். குற்றமற்ற இயேசுவை மரண தண்டனைக்கு தீர்ப்பிட்டீர்கள். ஆனால் இறந்தவரை கடவுள் உயிருடன் எழுப்பினார். அதற்கு நாங்களே சாட்சிகள். எனவே உங்களுக்காக தன்னுயிர் கொடுத்து உங்களை பாவத்திலிருந்து மீட்ட அவர்மீது நம்பிக்கை வையுங்கள் மீட்பு பெறுவீர்கள். சீடர்கள் தங்கள் நடுவில் நின்ற இயேசுவைக் கண்டு ஆவியென பயந்தனர். இயேசு

அவர்களிடம் தனது ஆணிகளால் துளைக்கப்பட்ட காயங்களைக் காட்டி பயத்தைப் போக்கினார். 3 வருடங்களாக அவரோடு உண்டுகுடித்தும் ஊர் ஊராக சுற்றியவர்கள் நம்பவில்லை அவரை காணாத நாமே நம்புகிறோம். நம்பினால் மட்டும் போதுமா? உண்மையான உள்ளத்துடன் அவரின் வார்த்தைகளை கடைப்பிடித்து அதன்படி வாழவேண்டாமா? இயேசுவின் வார்த்தையைக் கடைப்பிடிப்போரிடம் கடவுளின் அன்பு உண்மையாகவே நிறைந்துள்ளது. நாமும் அவரோடு இணைந்திருக்கின்றோம்.

இயேசுவின் இறப்பும் உயிர்ப்பும் ஒரு கட்டுக்கதையல்ல, அவருடன் வாழ்ந்த சீடர்களின் சாட்சியங்கள். நேரடியாகவே, அவரது துன்ப மரணத்தைக் கண்டவர்கள் என்பதால் இயேசுவின் உயிர்ப்பு அவர்களுக்கு மனமாற்றத்தையும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து, நற்செய்தி பணியை தீவிரமாக செயலாற்ற வல்லமையை கொடுத்து இயேசுவின் சீடர்கள்-மறைசாட்சிகள் என்ற புனிதத்தையும் கொடுத்தது. இயேசுவே, இத்திருப்பலியில் கலந்துகொள்ளும் நாங்கள் உம்மை உணர்ந்துக்கொள்ளவும், உமது நற்செய்திக்காக செயலாற்றவும் எங்கள் மனக்கண்களை திறந்தருளும்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, உமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் அன்பிலும், அமைதியிலும் தங்களின் அழைத்தலின் மேன்மையை உணர்ந்து, மனமகிழ்வுடனும் ஆர்வத்துடனும் தியாக உள்ளத்துடனும் செயல்பட அருள்புரிய உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியின் இறைவா, நாட்டுத் தலைவர்கள் தங்கள் மக்களின் நலனில் அக்கறைக்கொண்டு, அறநெறியில் நடந்து நீதியையும் அமைதியையும் வளமான வாழ்வையும் மக்களுக்கு அளித்து நல்லாட்சி செய்ய அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் இறைவா, தீராத நோயினால், அமைதியுற்றோர், வறுமையில் வாடுவோர் மனகுழப்பதில் தன்னை மாய்த்துக்கொள்வோர் அனைவரும் உம்மீல் ஆழ்ந்த நம்பிக்கையும் மனவுறுதியும் கொண்டவர்களாக அனைத்தையும் தைரியமுடன் ஏற்று வாழும் வரமருள அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. மன்னிக்கும் மனம் படைத்தவரே, உம்மை தனது சுயநலத்திற்காகக் காட்டிக் கொடுத்தவர்களையும், மக்களின் அநியாயத் தீர்ப்புக்கு ஆளாக்கியவர்களையும் நீர் மன்னித்ததுபோல நாங்களும் எங்கள் வாழ்வில் எங்களின் சுயநலத்திற்காகவும், தங்களின் தவற்றை உணர்ந்தும் உணராதவர்களாய் செய்த குற்றத்திற்காக இறைவா எங்களை மன்னித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 21.04.2024 இறையழைத்தல் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. லதா சுரேஷ்

I. தி.ப. 4: 8-12 II. 1யோவா. 3: 1- 2 யோவா. 10: 11-18

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நாம் பாஸ்காகாலத்தின் இரண்டாம் ஞாயிறையும், இறைஇரக்கத்தின் ஞாயிரையும் சிறப்பிக்கின்றோம். இறைவன் நம்மை தாய் வயிற்றில் உருவாகும் முன்பே நம்மைத் தேர்ந்தெடுத்துள்ளார். இவர் நம்மை பலவிதமான திட்டங்களை வகுத்து வழிநடத்துகின்றார். எகிப்தில் இஸ்ரயேல் மக்களை விடுவிக்க மோசேவை தேர்ந்தெடுத்தார். மோசே குலறும் திக்குவாயுடையவரை அழைத்து இஸ்ரயேல் மக்களை விடுவிக்க பயன்படுத்தினார். தானியேல் ஆமோஸ் போன்ற இறைவாக்கினர்களையும் தேர்ந்தெடுத்து அவர்கள் வழியாக எண்ணங்களை மக்களுக்கு எடுத்துரைத்தார். தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தவறு செய்யும்பொழுது தண்டித்து திருத்தவும், அவர்கள் துன்பப்படும்போது அவர்களை அரவணைக்கவும், தம்மால் அழைக்கப்பட்டவர்களைக் கொண்டு செயல்படுத்தினார். ஆதலால் இறைவன் தன் திட்டப்படியே ஒவ்வொரு செயலையும் செய்கின்றார். மனிதனை வழிநடத்துகின்றார் என்பதை பழைய புதிய ஏற்பாட்டின் வழியே நாம் அறிகின்றோம்.

தேவ அழைத்தல் பணிக்கு அர்ப்பணித்தோரின் வாழ்வும் உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு பாராமல் இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பவரே தகுதிவாய்ந்தவர். இன்று இயேசு இறைப்பணிக்கு யாரை அழைத்தார்? மீன்பிடிப்போர், வரிதண்டுவோர் போன்ற பாமர மக்களை அழைத்தார். கிறிஸ்தவர்களை அடியோடு அழிப்பேன் என்று சபதம்" செய்து வெறித்தனமாக அலைந்த சவுலை உலகமெங்கும் திருஅவை பரவிட வித்திட்டார். இவ்வுலகில் பலவிதமான பணிகள் இருந்தாலும் மறுவுலக வாழ்விற்கு வழிகாட்டும் ஒரேப் பணி இறையழைத்தல்பணி மட்டுமே. "அறுவடையோ மிகுதி வேளையாட்களோ குறைவு" ஆம் நரகத்தை நோக்கி சென்றுக்கொண்டிருக்கும் இவ்வுலகில் நித்திய வாழ்வுவுக்கு வழிக்காட்ட இயேசுவின் அன்பை சுவைக்க, நமக்காக சிலுவையைச் சுமந்த இயேசுவின் பணிசெய்ய நம்மையும், நம் பிள்ளைகளையும் அர்ப்பணித்து வாழ வரமருள வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. குருகுலத்தின் நாயகரே, எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரும் உம் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து மக்களை இறைவழியில் நடத்தக் கூடிய உம் தூய ஆவியாரின் வல்லமையை அளித்து பாதுகாத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. பாதுகாப்பின் பெட்டகமே எம் இறைவா, இந்திய நாட்டில் நடந்திருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் ஒற்றுமையைச் சீர்க்குலைக்காமல், அனைவரும் உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற உணர்வோடு எவ்விதப் பாகுபாடுமின்றி நல்லதொரு தலைவரை மக்கள் தேர்ந்தெடுக்க தெளிவான சிந்தனையும், பகுத்தறிந்து செயல்படும் எண்ணத்தையும் அளித்திடவும், மதச்சார்பற்ற அரசியல் தலைவர்களை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இன்பத்தின் ஊற்றே எம் இறைவா, ஒவ்வொரு குழந்தையும் அவர்கள் தாயின் வயிற்றில் உருவாகும் முன்பே நீர் அறிந்திருக்கின்றீர் என்றவரே, ஒவ்வொருவருக்கும் நீர் அருளிய இவ்வழைப்பினை முழுமன நிறைவோடு ஏற்று வாழும் நல்லுள்ளத்தை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. தாயின் வயிற்றில் உருவாகும் முன்பே எம்மை தேர்ந்த இறைவா, எம் இளையோரை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். படிக்கும் பிள்ளைகள், இளைஞர்கள் மற்றும் வேலையின்றி தவிப்போர் அனைவரையும் உமது கருணையினால் ஆசீர்வதித்து அவரவருக்குத் தேவையான அருள்வரங்களை அளித்து வாழ்வில் முன்னேற வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 23.04.2024 புனித ஜார்ஜ் அடால்பெர்ட் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

இறையேசுவில் பிரியமுள்ள இறைமக்களே, இன்று ஆயரும் பல தியாகங்கள் புரிந்து தியாகியாக வாழ்ந்து சான்று பகிர்ந்த பராக நகர் புனித ஜார்ஜ் அடால்பர்ட் அவர்களின் விழாவை நினைவுக்கூர்ந்து கொண்டாட அனைத்து இறை மக்களையும் அன்போடு அழைத்து மகிழ்கின்றோம். இவர் இன்று செக் குடியரசு எனப்படும் மத்திய போஹேமியன் பிராந்தியத்தில் நிம்பர்க் மாவட்டத்தில் பழமையான நகராட்சி கொண்ட கிராமத்து மண்ணுக்குச் சொந்தக்காரர். இவரைப்பற்றி நிறைய குறிப்புகள் இல்லை, ஆனாலும் புனிதராக அறிவிக்கும் அளவிற்கு இவரது வாழ்வு அமைந்திருந்தது. அதன் பெரிய நகரமாக இருந்த பராக் தான் தலைநகர். அதனால் தான் இவர் பராக் நகர் அடால்பர்ட் என அழைக்கப்படுகிறார்.

செக்குடியரசு நாடு நிலம் சூழ்ந்தது. வடக்கில் போலந்து, வட மேற்கில் ஜெர்மனி, தெற்கில் ஆஸ்திரியா, கிழக்கில் ஸ்லோவேக்கியா எல்லைகளாக கொண்ட நாடு. அங்கு இறை நம்பிக்கையற்றவர்கள் 59% விழுக்காடும், நம்பிக்கை உடையவர்கள் 26% விழுக்காடும் உள்ளார்கள் இப்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பு நாடாக உள்ளது. இவர் சிறுவயதிலேயே இறைப்பற்றுக் கொண்டு தனது விடாமுற்சியாலும் அர்ப்பணிப்போடும் அருள்பணியாளராகி ஈட்டி போன்று விரைவாக செயல்படும் தனது கூர்மையான சிந்தனை செயலால் நல்ல பண்புகளோடு

பல தியாகங்களை செய்து முன்மாதிரியாக இருந்துள்ளார். தொடர் உழைப்பால் தனது 41வது வயதிலேயே ஏப்ரல் 23 அன்று இறைவனோடு இணைந்தார். பராக் நகரில் இவருடைய பெயரில் திருத்தலம் உண்டு. அங்கு ஏப்ரல் 23ம் நாள் அன்று விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அது மட்டுமல்ல உயர் மறைமாவட்டமாக உயர்த்தப்பட்டுள்ளது. கிழக்கு கத்தோலிக்க ஆர்த்தடாக் ஆலயம் பாதுகாவலராக அறிவித்துள்ளனர். கி.பி. 999 ஆண்டு உரோமையில் திருத்தந்தை இரண்டாம் சில்வெஸ்டர் அவர்கள் இவரின் அரிய சேவையை அறிந்து புனிதராக அறிவித்தார். இன்றுள்ள சூழலில் இவரைப் போன்ற மக்கள் நலன் காக்கும் தூய உள்ளம் கொண்ட தலைவர்கள் உருவாக வேண்டும். நாமும் இப்புனிதரின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு செயல்பட வேண்டும் என இத்திருப்பலியில் இணைந்து செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் தாய் திருஅவையையும் சமூகத்தையும் நல்வழியில் நடத்திச் சென்றிட தூய உள்ளம் கொண்ட தியாகம் நிறைந்த அர்ப்பணிப்போடு வாழும் பணியாளர்கள் தேவை இப்புனிதரை போன்ற நல்லவர்கள் உருவாக உமது இறையருள் வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்.
2. எங்கள் சுமைகளை ஏற்றவரே, உம்மால் நாங்கள் பாவத்தை அகற்றி புதுவாழ்வு பெற்றுள்ளோம். இப்புது வாழ்வை உலகில் உள்ள அனைவரும் பெற்றுக்கொள்ள உமது இரக்கத்தை பொழிந்திட வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்
3. தூயோரானால் இறைவனைக் காணலாம் என்றவரே உலகெங்கும் இறையாட்சிப் பணி சிறப்புற்று செயல்பட அதன் மூலம் அன்பும் அறமும் பெருகி அமைதி சமாதானம் நீதி நேர்மை தழைத்தோங்கி வளர உமது ஆவியின் ஆற்றல் வல்லமை வலிமை அளவில்லாமல் ஊற்ற வேண்டி உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம்.

## 25.04.2024 புனித மாற்கு நற்செய்தியாளர் விழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறையேசுவில் அன்பிற்குரியவர்களே, இன்று திருஅவையானது நற்செய்தியாளரும், மறைசாட்சியுமான புனித மாற்குவின் திருவிழாவைக் கொண்டாடுகிறது. இயேசுவின் 70 சீடர்களில் இவரும் ஒருவர். இவர் பாஸ்கா விருந்து ஏற்பாடு செய்ய திருத்தூதர்கள் சென்றபோது தண்ணீர்குடம் சுமந்து சென்றவர் என்றும், கைது செய்யப்பட்டபோது ஆடையின்றி ஓடியவர் என்பதும் மரபுச்செய்தி. மாற்கு நற்செய்திதான் முதன் முதல் எழுதப்பட்ட நற்செய்தி. கி.பி. 60-70க்குள் எழுதப்பட்டது. மற்ற நற்செய்தி நூல்களுக்கு இதுவே ஆதாரம். புனித பேதுரு இவரை "என் மகன்" என்று அழைக்கிறார். பேதுருவுடன் திருத்தூதுப்பணியாற்றியவர்.

இயேசுவைப் பற்றிய நற்செய்தியை பேதுருவே இவருக்கு கற்றுத்தந்தார். இவர் பர்னபாவுக்கு நெருங்கிய உறவினர். இவர் பவுலின் மூன்றாம் பயணத்தில் பின் தொடர்ந்தவர். மரியா என்பவர் இவரது தாயார். இவருடைய இல்லத்தில்தான், புதுக் கிறிஸ்தவர்கள் தங்கிச் செல்வார்கள். உரோமைச் சிறையில் புனித பவுலுக்கு உதவி செய்தவர்.

"இயேசு கிறிஸ்து கடவுளின் மகன்" என்ற நற்செய்தியைப் புறவினத்தாருக்கு அறிக்கையிடுவதே இவரது நற்செய்தியின் நோக்கம். இவர் நீரோ மன்னனின் ஆட்சிகாலத்தில் மறைசாட்சியாக கி.பி. 68ல் இறந்தார். இவரது உடல் கி.பி. 830ம் ஆண்டு அலெச்சாண்டிரியா நகரத்திலிருந்து கொண்டு வரப்பட்டு வெனிஸ் நகரிலுள்ள புனித மாற்கு பேராலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. புனித மாற்கு வெனிஸ் நகரின் பாதுகாவலர். புனித மாற்கு நமக்கு தெரிவிக்கும் பாடம் என்னவென்றால் "நீங்கள் உலகமெங்கும் சென்று நற்செய்தியைப் படைப்பிற்கெல்லாம் அறிவியுங்கள்" என்ற இயேசுவின் வார்த்தையை ஏற்றுக்கொண்டு புனித பவுல் மற்றும் புனித பேதுரு ஆகியோருடன் மாற்கு பணி செய்ததுபோல நாமும் நம் வாழ்வின் மூலம் நற்செய்தியை அறிவிக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பே உருவான எங்கள் மீட்பரே, புனித மாற்கு நற்செய்தியை எழுதி உம்மைப்பற்றி செய்தியை இம்மண்ணுலகிலுள்ள மக்களுக்கு அறிவித்தார். எங்களுடைய திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரிகள், துறவறத்தா ஆகியோர் தங்களின் வாழ்க்கையில் நற்செய்தியின் தூதுவர்களாக செயல்பட்டு, வார்த்தையை வாழ்வாக்கிட வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. நிறைவாழ்வளிக்கும் எம் இறைவா, உயிர்ப்பைக் கொண்டாடி மகிழ்கின்ற நாங்கள் உம் உயிர்ப்பு தரும் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு, அமைதி, சமாதானம், ஒற்றுமை எங்கள் வாழ்வில் தங்கி, பாவம், பொறாமை, வன்கொடுமை, நோய், ஏழ்மை, மதவெறி, விட்டுக்கொடுக்காமை, தீவிரவாதம் போன்றவற்றில் வீழ்ந்துக்கிடக்கும் எம் இறைச்சமூகத்தை புதுவாழ்வுக்கு உயிர்த்தெழச் செய்யதருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. வறண்ட நிலத்தில் தண்ணீரை உண்டாக்கியவரே, எங்களுக்கு நீர் கொடுத்த இயற்கைச் செல்வங்களை, வனஉயிர்களை அழிக்காமல், அவை ஒவ்வொன்றையும் மனிதனுக்காக படைத்தீர் என்பதை மறந்திடாதவாறு நீர் அவற்றை பாதுகாக்கும் நல்லுள்ளங்களை உருவாக்கிடவும், அதன்மூலம் நல்ல விளைச்சலையும், அறுவடையும் கிடைக்கும் அளவுக்கு மழையை எங்களுக்கு அளித்து வாழ்வில் மகிழ்வினைச் சுவைத்திட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 28.04.2024 பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

I. தி.ப. 9: 26-31 II. 1யோவா. 3: 18-24 யோவா. 15: 1-8

உயிர்த்த ஆண்டவரில் நம்பிக்கையுடன் வாழும் இறைச்சமூகமே, ஆண்டவர் இயேசு தன்னோடு இணைந்திருக்கவும் நற்கனிகளைத் தந்து தந்தையை மகிமைப்படுத்தவும் அழைக்கின்றார். இன்றைய முதல் வாசகத்தில் புனித பவுல் எருசலேமிலிருந்து மற்றத் திருத்தூதர்களோடு இணைந்து யூதேயா, சமாரியா, கலிலேயா எங்கும் சுற்றி நற்செய்தியை அறிவித்து திருஅவையை வளர்த்தார் என்பது முதல் வாசகம் விளக்குகிறது. இன்றைய நற்செய்தியில் இயேசு உண்மையான திராட்சை செடி நானே நீங்கள் அதன் கொடிகள் ஒருவன் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனிதருவார் என்கிறார் ஆண்டவர். கிறிஸ்துவோடு இணைந்திருப்பதில் தான் நம் வெற்றி வாழ்வு அடங்கி உள்ளது. கனிகளைக் கொண்டே மரம் அறியப்படுகிறது. நல்ல கனிதரும் கெட்ட மரமும் இல்லை, கெட்ட கனிதரும் நல்ல மரமும் இல்லை நாம் தரும் கனிகள் நம் சிந்தனை சொல் செயலில் அடங்கி உள்ளது. நாம் எந்தக் கனிகளை கொடுக்கின்றோம்.

நம் பேச்சு எந்த ஒரு தீமையும் இல்லாத நல்ல வார்த்தைகளாக உள்ளதா. நம் செயல்கள் நற்பலன் தரக்கூடியதாக இருக்கின்றதா, இறை திருவுள்ளம் நிறைவேற்றுவதாக உள்ளதா? என்பதை சிந்திப்போம். நாம் ஆண்டவரால் தறிக்கப்பட்டால் அது அழிவு, நம் கழிக்கப்பட்டால் அது வாழ்வு நம் நம்பிக்கையை பொறுத்தே அது அமையும். காரணம் இறைவனையும் நம்மையும் இணைக்கும் பாலமே நம்பிக்கை தான். நம்பிக்கை அறுந்து போனால் கிறிஸ்துவை விட்டு அன்னியப்பட்டு போவோம். ஆபத்துக்கள் நம்மை சூழ்ந்துக்கொள்ளும். கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மை பிரிப்பது எது. பவுல் பட்டியலிடுகிறார் கிறிஸ்துவிடமிருந்து நம்மை பிரிக்கும் தீமையை இனம் கண்டு நாம் அழிக்க வேண்டும். அது சாதியா, பணமா, தீய பழக்கவழக்கமா, பாவ சார்புடைய எண்ணங்களா, சுய நலமா, அவிவிசுவாசமா, ஆணவமா, அடிமைத்தனமா? எதுவாக இருந்தாலும் இனம் கண்டு அழிப்போம். கிறிஸ்துவின் அன்பில் நம்மை புதுப்பித்துக் கொள்வோம். நல்ல கனிகளை நாளும் தந்து கடவுளை மகிமைப்படுத்துவோம் அதற்கான அருளை இப்பலியில் இரந்து மன்றாடுவோம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அழைத்தலின் நாயகனே எம் இறைவா கனிதர அழைக்கப்பட்ட உம்பணியாளர்கள் அனைவரையும் உம்பாதம் படைக்கின்றோம். அவர்கள் உடலாலும் உள்ளாத்தாலும் முழு மனத்தாழ்மையோடு பணிசெய்து நிறைந்த கனிகளைத் தந்திட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகின்றோம்.

2. உரிமைகள் வழங்கும் இறைவா எம்நாட்டுத் தலைவர்கள் இனம், மொழி, மதம் என்ற வர்க்க பேதத்திற்குள் தங்களை அடைத்துக் கொள்ளாமல் அனைத்து மக்களையும் சம உரிமையோடு நடத்திட அருள்புரிய உம்மை மன்றாடுகின்றோம்.

3. என்னை பிரிந்து உங்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று சொன்ன இயேசுவே உம்மிடமிருந்து எங்களை பிரிக்கும் சக்திகளை இனம் கண்டு அழிக்க ஆவியின் வல்லமை வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்.

4. நீங்கள் என்சாட்சிகள் என்ற இயேசுவே எம் இளைய சகோதர சகோதரிகளை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம், மாய உலகில் அறிவுத்தாக்கம், நுகர்வுத்தாக்கத்தினாலும் மந்தமடையாதபடியும் விழிப்பும் விசுவாசமும் பெற்று நல்லகனிகளை குடும்பத்திலும் சமூகத்திலும் அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகின்றோம்.

## 29.04.2024 சியென்னா நகர்ப் புனித பிதேலிஸ் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

சியன்னா நகரில் அரண்மனையில் பிறந்த இவர் சிறுவயதிலிருந்தே ஏழைகள் மீதும், துன்பப்படுபவர்கள் மீதும் மிகவும் பரிவும், அன்பும் கொண்டிருந்தார். சிறுவயதிலிருந்தே இறைபக்தியிலும், ஞானத்திலும் வளர்ந்த இவர் திருமணத்தில் விருப்பமில்லாததால் டோமினிக்கன் சபை 3ஆம் சபையில் சேர்ந்து அதற்குரிய உடைகளை அணிந்து கொண்டார். தன் அறையில் தனிமையில் செபித்துக்கொண்டிருக்கும் போது இயேசு தன் தாயுடனும், மற்றும் வானதூதர்களுடனும் காட்சியளித்தார். மேலும் ஆண்டவர் அவரது விரலில் மோதிரம் அணிவித்து, "துணிவு கொள்" அலகையின் சோதனைகளை வெல்ல உனக்கு வரம் அருளுகிறேன் என்று கூறினார். இந்த மோதிரம் கத்ரீனின் கண்களுக்குத் தவிர மற்றவர்களுக்கு தெரியாது. அது முதல் தன்னுடைய தனிமையை நீக்கிக் கொண்டு மக்களை சந்திக்கவும், அவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக உழைக்கவும் தன்னை அர்ப்பணித்தார்.

ஒருமுறை திருப்பலியின் போது நற்கருணை உட்கொண்ட பின் இறை இயேசு உடன் இணைந்திருக்கையில், பாடுபட்ட சுரூபத்தையே உற்று பார்த்துக்கொண்டிருந்த இவரின் உடலில் பாடுபட்ட சுரூபத்திலிருந்து வந்த கதிர்கள் கத்ரீனின் கைகள், கால்கள், இதயத்தை துளைத்தன. வாழ்நாள் முழுவதும் இவை ஆறாத புண்களாய் அளவிட முடியாத வேதனை அளித்தன. இந்த ஐந்து காயங்களும் கத்ரீனாவின் வேண்டுதல் படி அவர் இறக்கும் வரை மற்றவர்களின் கண்களுக்குத் தெரியாமல் இருந்தது. இவர் வாழ்ந்த அந்நாட்களில் திருஅவையில் திருதந்தையர்களும், திருஅவைக்கும் ஏற்பட்டிருந்த குழப்பங்களை தீர்த்துவைக்க மிகவும் உதவியாக இருந்தார். திருத்தந்தையின் அழைப்பிற்கிணங்க உரோமைக்கு

வந்த இவரது உடல் நாளுக்கு நாள் நலிவடைந்து, உடலில் ஏற்பட்ட வலிப்பு காரணமாக எட்டு நாட்கள் தாங்கமுடியாத வேதனைகள் பட்டு, தமது 33வது வயதில் விண்ணகம் சென்றார். இவர் பெண்குலத்தில் இரண்டாவது மறைவல்லுநர். புனித கத்ரீனாவின் நினைவு நாளை சிறப்பிக்கும் நாம், இப்புனிதர் போல இறையேசுவில் நெருங்கிய உறவு கொள்ளவும் திருஅவைக்கு நம்மால் இயன்ற நற்செயல்களை செய்யும் பண்புகளை நம்மில் உருவாக்க இறைவனிடம் இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொது நிலையினர் அனைவருக்கும் நல்ல உடல் நலமும், ஆன்ம நலமும் தருவதோடு, அனைவரும் ஒற்றுமையாய், ஒரே மனதுடன், துணிவோடு திருஅவையை பேணிகாக்கும் வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பே உருவான இறைவா, எங்களின் வாழ்வில் எங்களுக்கு ஏற்படும் எல்லவிதமான துன்ப துயரம், வியாதிகள், குடும்ப பிரச்சனைகள், சமுதாய இன்னல்கள் போன்ற துன்பங்கள் எங்களை மனவேதனைக்குள்ளாக்கும் போது உம்மை மட்டுமே உறுதியாக பற்றிக் கொள்ளும் தாழ்மையான மனம் தந்திட உம்மை மன்றாடுகின்றோம்.

3. வாழ்வோரின் கடவுளே இறைவா, இன்றைய புனிதர் கத்ரீனாவைப் போல நாங்களும், எங்களால் இயன்றவரை திருஅவையின் வளர்ச்சிக்காக, பங்குத்தந்தையோடு ஒத்துழைத்துச்செல்லும் நல்ல மனநிலையை அளித்தருள உம்மை மன்றாடுகின்றோம்.

## 30.04.2024 புனித ஐந்தாம் பயஸ் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. மாலா செபமாலை

இறை இயேசுவின் அன்பு மக்களே, இன்று திருத்தந்தை ஐந்தாம் பயஸ் அவர்களின் விழாவைச் சிறப்பிக்க இங்கு கூடியுள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இவர் கி.பி. 504ம் ஆண்டு இத்தாலியில் பிறந்தார். இவரது இயற்பெயர் மிக்கேல், இவர் இளம் வயதிலேயே டொமினிக்கன் சபையில் சேர்ந்து ஒறுத்தல் முயற்சிகளை அதிகளவில் மேற்கொள்பவராகவும் விளங்கினார். இதனால் தமது ஐந்தாவது வயதிலேயே துறவியானார். "திரித்தெந்துப் பொதுச்சங்கம்" இதை நிறுவிய கூட்டிய இவர் உரோமை மறைக்கல்வி கட்டளை மன்றாட்டு, திருப்பலி நூ ல் போன்றவற்றை வெளியிட்டார். இதனுடன் "மெய்யியல்", "இறையியல்" பேராசியராகப் பணிபுரிந்தார். 1566ம் வருடம் 5ம் பயஸ் என்ற பெயருடன் திருத்தந்தையானார். இவருடைய காலத்தில்தான் தொன் ஜீவன் "பொபாற்தோ" போரில் துருக்கியரை முறியடித்தார்.

இவர் நோயாளிகளுக்கும், ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும் அதிகமாக உதவி செய்தார். இந்த திருத்தந்தைதான் செபமாலை அன்னையின் திருவிழாவை அக்டோபர் மாதத்தில் கொண்டாடும்படி ஏற்படுத்தினார். இவர் 1572ம் ஆண்டு மே மாதம் 1ம் தேதி இறைப்பதம் அடைந்தார். திருத்தந்தை 11ம் கிளமெண்ட் மே 22ம் நாள் 1712ல் இவருக்கு புனிதர் பட்டம் அளித்தார். இளம் வயதிலேயே குருவாக திருநிலைப்படுத்தியதுபோல் நாமும் நம் பிள்ளைகளை கத்தோலிக்க கிறிஸ்தவக் குழந்தைகளாக வளர்த்து இறைவனின் சித்தப்படி வழிநடத்துவோம். புனித ஐந்தாம் பயஸ் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை பின்பற்றி பிள்ளைகளை இறைபக்தியிலும், ஞானத்திலும் வளர்க்க வரமருள இத்திருப்பலியில் பங்கேற்று செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நிலைவாழ்வளிப்பவரே, திருஅவை என்பது இல்லறமும், துறவறமும் இணைந்திருக்கும் ஓர் ஆலயம் என்பதை உணர்ந்து உம் திருப்பணியாளர்களும், பிள்ளைகளும், உமது விருப்பத்திற்கேற்ப வாழ்ந்திடவும், வாழ்வில் ஏற்படும் இடர்களை தவிர்த்து வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பரே எம் இறைவா, நீர் படைத்து புனிதப்படுத்திய இவ்வுலகையும், மக்களையும் உம்மிடம் சமர்ப்பிக்கின்றோம். உலகில் பலவிதமான அசம்பாவிதங்கள் அரங்கேறிக்கொண்டிருக்கும் இக்காலத்தில் நாட்டையும் மக்களையும் நல்வழியில், இறைவழியில் நடத்தக்கூடிய நல்லத் தலைவர்களை தேர்ந்தெடுக்கும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. புதுவாழ்வளிப்பவரே எம் இறைவா, தூய ஆலயமாகிய எங்களின் உடலையும், உள்ளத்தையும் இத்தவக்காலத்தில் புனிதப்படுத்தவும், உண்மையான தவச்செயல்களால் நாங்கள் உமது பாடுகளை நினைத்து எங்கள் வாழ்வில் ஏற்படும் சிறுசிறு தவறுகளை உணர்ந்து, அவற்றிற்கு அடிமையாகாமல் எங்களை நாங்கள் உமது புனிதமான வாழ்வில் எங்களை இணைத்துக்கொண்டு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## அன்னை மரியாவின் அர்ப்பணம் - நமக்குத் தரும் பாடம்

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

அன்பர்களே, ஏப்ரல் என்றாலே இயேசுவின் உயிர்ப்பை, அவரது இறைத்தன்மையை இந்த உலகிற்குப் பறைசாற்றும் மாதமாக விளங்குகிறது. இயேசு கிறிஸ்து இறப்பை வென்று மீண்டும் உயிருடன் வந்ததால் அவர் இறைமகனாக, மனிதராக வந்த கடவுள் என்பதை இந்த உலகம் அறிந்துக் கொண்டது. ஆனால் இயேசு பிறப்பதற்கு முன்பே அவர் கடவுளின் மகன் என்று கன்னி மரியா அறிந்திருந்தார். "உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது. அது இறைமகன் எனப்படும்" என்பதே வானதூதரின் செய்தியாக இருந்தது. "இதோ, ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று மரியா அளித்தப் பதில் கடவுளையே இந்த உலகிற்குக் கொணர்ந்தது. கணவரை அறியாத கன்னிப் பெண்ணாக இருந்த பொழுதே, கடவுளின் தாயாகும் அழைப்புக்கு அவர் சம்மதம் வழங்கினார். இவ்வாறு மரியா தம்மையே கடவுளுக்கு அர்ப்பணித்ததால், மனிதருக்கான மீட்புத் திட்டம் நிறைவேற வாய்ப்பு அமைந்தது. கடவுளின் வாக்கானவர் மனிதராகி நம்மிடையே குடிகொண்டு, கடவுளோடு மனிதரை ஒப்புரவாக்கும் திட்டத்தை நிறைவேற்றினார்.

அன்னை மரியாவின் வாழ்வு முழுவதுமே உலகை எதிர்த்து நிற்கும் போராட்டமாக இருந்தது என்றால் அது மிகையன்று. "இதோ, இக்குழந்தை எதிர்க்கப்படும் அடையாளமாக இருக்கும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" என்று சிமியோன் கூறியதற்கு ஏற்ப, இயேசுவின் பாடுகளில் மரியாவும் பங்கேற்க வேண்டியிருந்தது. மரியா திருமணத்திற்கு முன்பே கருவுற நேர்ந்ததால், யோசேப்பு அவரை மறைவாக விலக்கத் திட்டமிட்டார். எனினும், கடவுளின் தலையீட்டால் அவர் மரியாவைத் தம் மனைவியாக ஏற்றார். பெத்லகேமில் மெசியா பிறக்க வேண்டும் என்ற கடவுளின் திட்டத்தால், மரியா தம் மகனை மாட்டுத் தொழுவத்தில் பெற்றெடுக்க நேர்ந்தது. அவரைக் காப்பாற்ற வேண்டி எகிப்து நாட்டுக்கு அகதியாய் சென்று அங்கே சிறிது காலம் அந்நியராய் வாழும் நிலை ஏற்பட்டது. பன்னிரு வயதில் எருசலேமில் தங்கிவிட்ட இயேசுவின் செயலால் மூன்று நாட்கள் அலைந்து திரியும் வேதனையை அனுபவித்தார். எனினும், இவ்வுலகிற்கு வந்த ஆண்டவரைக் கருத்தாங்கி, பெற்றெடுத்து, பாலூட்டி வளர்த்தவர் என்கின்றப் பெருமை கிடைத்தது.

இயேசு நாசரேத்துக்குச் சென்று, பெற்றோருக்குப் பணிந்து நடந்தார் என்று லூக்கா நற்செய்தி குறிப்பிடுகிறது. இவ்வாறு, கடவுளின் மகனையே ஒரு தச்சரின் மகனாக வளர்க்கும் பொறுப்பை மரியா திறம்பட நிறைவேற்றினார். யோசேப்பின் இறப்புக்குப் பிறகும், மீட்பரின் தாய் என்ற முறையில் குறித்தக் காலம் வருகின்ற வரை மனிதகுல

மீட்புக்காக இயேசுவைத் தயார் செய்தார். இயேசு தமது இறையாட்சிப் பணியை மக்களிடையே தொடங்க, தண்ணீரைத் திராட்சை ரசமாக்கி முதல் புதுமை செய்யுமாறு தூண்டியவர் மரியாவே. இயேசு மக்களிடையே இறையாட்சி குறித்து போதித்த வேளையில், ஒரு தாயாகவும் சீடராகவும் மரியா அவரைப் பின்தொடர்ந்தார். "உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டியத் தாய் பேறுபெற்றவர்" என்று பெண்கள் பலரும் மரியாவைப் புகழ்ந்தனர். "கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுபவரே என் தாய்" என்று இயேசுவே தமது அன்னையின் மேன்மையைச் சுட்டிக் காட்டினார். இவ்வாறு கடவுளின் திட்டத்தை நிறைவேற்றத் தமது வாழ்நாள் முழுவதையுமே அர்ப்பணித்தவர் அன்னை மரியா என்று நற்செய்திகளின் வழியாக நாம் அறிகிறோம்.

இறைமகன் இயேசு சிலுவையில் உயிர்விடும் தருணம் வரையிலும் அன்னை மரியா அவரோடு பயணித்தார். ஓர் அன்புள்ளத் தாயாக, கடவுளின் திட்டத்திற்குத் தமது வாழ்வை அர்ப்பணித்தவராக வேதனைகள், சோதனைகளைப் பொறுமையோடு சகித்துக் கொண்டார். உலக மக்களைப் பாவத்தின் பிடியிலிருந்து விடுவிக்க, "தாம் பெற்றெடுத்த மகனைப் பலியிடவும் மரியா அன்புடன் இசைந்தார், தாயுள்ளத்தோடு தம்மையே அவரது பலியுடன் இணைத்தார்" என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் எடுத்துரைக்கிறது. இயேசுவின் வாழ்வு சிலுவையில் இறந்து, அடக்கம் செய்யப்பட்ட நிகழ்வோடு முடிந்து போகவில்லை. அவர் உயிர்த்தெழுந்து, தமது இறைத்தன்மையின் மாட்சியை அன்னை மரியாவுக்கும் சீடர்களுக்கும் வெளிப்படுத்தினார். இவ்வாறு, மரியா தமது அர்ப்பணத்தின் முழுமையை இயேசுவின் உயிர்த்தெழுதல் வழியாகக் கண்டார். மேலும், சீடர்களின் தாயாக இருந்து தூய ஆவியாரின் வருகைக்காக அவர்களைத் தயாரித்தார். பெந்தக்கோஸ்து நாளில் ஆவியார் இறங்கி வந்த வேளையில் மரியா திருஅவையின் தாயானார்.

அன்னை மரியாவின் வழிகாட்டலுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்த முதல் கிறிஸ்தவ சமூகம் நற்செய்தியை உலகெங்கும் கொண்டு சேர்த்தது. இயேசு அளித்த மீட்பைப் பெற்றுக்கொண்ட மக்கள் அனைவரிடமும் மரியாவின் ஆன்மீகத் தாய்மை விரிவடைந்தது. திருத்தூதர் யோவான் வீட்டில் தமது இறுதி நாட்களைச் செலவிட்ட அன்னை மரியா, நற்செய்தியின் முதன்மை சாட்சியாக வாழ்ந்தார். இறப்பு அன்னையைத் தழுவியதும், ஆண்டவர் அவரை உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்தில் ஏற்று மாட்சியைப் பரிசாக வழங்கினார். இவ்வாறு, ஆண்டவரின் அடிமையாகத் தம்மை வழங்கிய அர்ப்பணத்துக்கு வாழ்நாள் முழுவதும் மரியா உண்மையுள்ளவராக இருந்தார். பல்வேறு சோதனைகளும் வேதனைகளும் வாழ்வில் வந்தாலும், அவர் தமது அர்ப்பணத்தில் இருந்து ஒருநாளும் விலக முயன்றதில்லை.

கடவுள் பார்த்துக் கொள்வார் என்ற உறுதியான நம்பிக்கையோடு எல்லா சவால்களையும் கடந்துச் சென்றார். தமது இறப்பு வரையிலும்

கடவுளின் மீட்புத் திட்டத்துக்கு முழுமையாக ஒத்துழைத்து, விண்ணக மாட்சியின் வெகுமதியையும் அவர் பெற்றார். கடவுளின் விருப்பம் நமது வாழ்வில் நிறைவேற நம்மை அர்ப்பணம் செய்வதற்கு மிகுந்த பொறுமை அவசியம் என்பதை மரியாவின் வழியாக நமக்கு உணர்த்தப்படுகிறது. இயேசுவின் பிறப்பு முதல் இறப்பு வரை அன்னை மரியா பல துன்பங்களைத் தாழ்ச்சியோடும் பொறுமையோடும் ஏற்றுக் கொண்டார். கடவுளின் திட்டத்துக்கு நம்மை முற்றும் அர்ப்பணித்தால், நம்மைப் பெருமையாக கருதாத மனநிலை வர வேண்டும். அன்னை மரியாவைப் போன்ற தாழ்ச்சியுள்ள மனநிலையில் வாழ்ந்தால், உலகில் சண்டைகளுக்கும் சர்ச்சைகளுக்கும் இடமிராது.

திருமுழுக்கு வழியாக நாமும் கடவுளின் பிள்ளைகளாக வாழ்வதற்கான அர்ப்பண உள்ளம் கொண்டவர்களாக இருக்கவேண்டும். கிறிஸ்தவ வாழ்விற்கான இந்த அழைத்தலில் பல சோதனைகளும் இடர்களும் வந்து நம்மைத் தடுமாறச் செய்யலாம். எனினும், இறுதிவரை நிலைத்திருப்போரே வெற்றி வாகைச் சூடமுடியும் என்றப் பாடத்தை அன்னை மரியா நமக்கு கற்றுத் தருகிறார். நமது வாழ்வில் வருகின்ற நெருக்கடிகளை கடவுளின் துணையை நம்பி கடந்துபோக நாம் கற்றுக் கொண்டால், நாமும் விண்ணகத்தை உரிமையாக்கிட முடியும்.

## இறை இரக்கத்தின் வலிமையே மனித வாழ்வின் வலிமை

திரு. பி. விக்டர்

அன்பு இறைச்சமூகமே, இன்று நாம் ஆராதிக்கும் ஆண்டவராகிய கடவுள் அன்பும், இரக்கமும் நிறைந்தவர். ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர் (திரு.பா 103:8) என்று திருப்பாடல் சொல்கிறது. தாவீது அவர் தன்னை உண்டாக்கிய கடவுளைக் குறித்து சொல்லும்போது, "என் தலைவர் நீர் இரக்கமிகு இறைவன்" (தி.பா. 83:15) என்று சொல்லி மகிழ்கிறார். "உங்கள் கடவுளாகிய ஆண்டவர் இரக்கமிகு இறைவன், அவர் உங்களைக் கைவிட மாட்டார்" (இ.ச.3:31) என்ற மோசே இரக்கமிகு இறைவனைக் குறித்து மக்களுக்கு எடுத்துரைக்கின்றார். ஆண்டவராகிய இயேசுவும் "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவராய் இருங்கள்" (லூக் 6:36) என்று தன்னைச் சுற்றியிருந்த மக்களிடம் கூறினார். இவ்வாறாக நம் விண்ணகத் தந்தை இரக்கம் உள்ளவர் என்பதை எடுத்துரைத்தார்.

நம் விண்ணகத் தந்தையும் ஆண்டவராகிய கடவுள் இரக்கம் உள்ளவராய் இருந்து தனது வலிமையை விளங்கச் செய்ததைப் படைப்பின் தொடக்கத்திலிருந்து அறிய முடியும். தொடக்கத்தில் உலகையும் அதில் உள்ள யாவற்றையும் படைத்து, இறுதியில் தான் படைத்த அனைத்தையும் மனிதனிடம் ஒப்படைத்து, எல்லாவற்றையும் ஆண்டுக்கொள்ளும் அதிகாரத்தையும் வழங்கினார். அதிகாரம் பெற்ற மனிதன் ஆண்டவரின்

கட்டளையை மறந்தான், பாவம் செய்தான். பாவத்தின் சம்பளம் மரணம் (உரோ. 6:23) ஆனால் கடவுளோ அவனை அழிக்காமல், அவன் மீது இரக்கம் வைத்தார். அவனை பாவத்திலிருந்து மீட்பதற்காக ஒரு மீட்பரை அனுப்பி வைப்பதாக வாக்களித்து ஏதேனை விட்டு வெளியே அனுப்பி விட்டார். இதுதான் ஆண்டவராகிய கடவுளின் முதல் இரக்கச் செயல். காலம் நகர்கிறது, மனித இனம் பெருகியது. நோவா வாழ்ந்த காலம் வருகிறது.

அவர் காலத்தில் மண்ணில் மனிதர்கள் செய்யும் தீமைகள் பெருகுவதையும் அவர்களுடைய இருதய சிந்தைகளெல்லாம் நாள் முழுவதும் தீமையிலே திளைத்திருப்பதையும் ஆண்டவர் கண்டார். எல்லாவற்றையும் நலமெனக் கண்ட ஆண்டவராகிய கடவுள் முதல் முறையாக "இந்த உலகில் மனிதரைப் படைத்ததற்காக மனம் வருந்தினார். அவரது உள்ளம் துயரம் அடைந்தது (தொநூ. 6:6) எனவே உலகில் தான் படைத்த யாவற்றையும் அழித்துவிட எண்ணினார். ஆனால் "நோவா" என்கிற ஒரு மனிதன்மேல் ஆண்டவருக்கு இரக்கம் உண்டாயிற்று. ஏனெனில் அவரது குடும்பம் மட்டுமே நேர்மையாளர்களாகவும் குற்றமற்றவர்களாகவும் கடவுளுக்கு ஏற்புடையவர்களாகவும் வாழ்ந்தனர். வெள்ளப் பெருக்கால் உலகை அழித்த ஆண்டவர் நோவா குடும்பத்தை ஒரு "பேழை" மூலம் காப்பாற்றி இந்த உலகை மறுபடியும் புதுப்பித்து தன் இரக்கத்தின் வலிமையை வெளிப்படுத்தினார்.

வேதனையின் உச்சத்தில் ஆண்டவரை நோக்கி மன்றாடினர். அதே வேலையில் இந்த 400 ஆண்டுகளில் கானான் நாட்டில் குடியிருந்த பல்வேறு கானானியர்களைக் கொண்டு அந்த நாட்டை பாலும் தேனும் பொழியும் மிகச்சிறந்த நாடாக மாற்றியிருந்தார் கடவுள். எனவே தம் அடியார் மோசேயைக் கொண்டு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தன் மக்களை விடுவித்த ஆண்டவர், அவர்களை பாலும் தேனும் பொழியும் கானான் நாட்டில் குடியமர்த்தினார். பலவிதமான அதிசய அற்புதங்கள் செய்து, தன் இரக்கத்தின் உரிமையை இஸ்ரயேல் மக்களுக்கு வெளிப்படுத்தினார். அவர்கள் தவறுகள் செய்யும்போது கண்டித்து தண்டித்தார், அழிய வேண்டியவர்களைத் தவிர்த்து மற்றவர்களை நீதித்தலைவர்கள் வழியாகவும், இறைவாக்கினர் வழியாகவும், அரசர்கள் வழியாகவும் வழிநடத்தி தன் இரக்கத்தின் வலிமையை வெளிப்படுத்தினார்.

இவ்வாறு பல நூற்றாண்டுகள் கடந்தன. இறுதியில் காலம் நிறைவேறியபோது இரக்கமிகு ஆண்டவராகிய கடவுள் தன் ஒரே மகன் இயேசுவை "மீட்பராக" உலகிற்கு அனுப்பினார். அது வரையில் கண்டிக்கும் கடவுளை, கோபிக்கும் கடவுளை கண்டு வந்த மக்கள் எளிமையானவரான, இனிமையானவரான, இரக்கமிகு இயேசுவைக் கண்டனர். அவரது இரக்கச் செயல்களைக் கண்டு மகிழ்ந்தனர். அவர் மனிதர்கள்மீது

வைத்துள்ள அன்பை அறிந்து கொள்கின்றனர். பாவிக்கும் மனந்திருந்த வாய்ப்பளிக்கும் இயேசுவைக் காண்கின்றனர். இயேசுவின் இரக்கத்தின் வலிமை மக்களை ஆச்சரியப்படுத்தியது. "தூய ஆவியானவரால் அருள் பொழிவு செய்யப்பட்டவராக, ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் (லூக். 4:18) இரக்கத்தின் கடவுளாம் ஆண்டவர் இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார். ஆனால் மக்களை இயேசுவை வேறுவிதமாய் பார்த்தார்கள்.

அதிகார வெறிபிடித்த மதத்தலைவர்களை, சதுசேயர், பரிசேயர்களைக் கண்டித்தார். மக்களுக்கு நன்மைகள் செய்ய தடையாய் இருந்த சட்டங்களை மீறி நன்மை செய்தார். எளியவர்களுக்கு உதவிகள் செய்தார். நோயால் வாடியோருக்கு நலமளித்தார். பிசாசுகள் பிடித்தோரை சுகமாக்கினார். முடவர்களை நடக்கச் செய்தார், தொழுநோயாளரை சுகமாக்கினார், குருடர்களுக்குப் பார்வை தந்தார், இறந்தோரை உயிர்த்தெழவும் செய்தார். இவ்வாறு இறைவனின் இரக்கத்தின் வலிமை மக்களுக்கு வெளிப்படுத்தியபோது, அந்த இரக்கம் மக்களுக்கு வலிமையூட்டியது, இவர்தான் நம்மை மீட்கவந்த மீட்பர் என்றும் மெசியா என்றும் நம்பினர். நம்பின வேகத்தில் அவரைத் தங்களுக்கு அரசராக ஆக்க முயன்றனர். ஆனால் இயேசு தம் வழியே கடந்து போனார் (யோவா.6:15). அன்றைய மக்கள் எதிர்நோக்கியதோ சாதாரண உலக அரசு. ஆனால் இயேசு கொண்டு வந்ததோ "இரக்கத்தின் அரசு" இறைவனின் இரக்கத்தை வெளிப்படுத்திய ஒரு வலிமைமிகு மனித வாழ்வை உருவாக்கவே இயேசு உலகிற்கு வந்தார். இயேசுவின் இரக்கமிகு அரசில் நமக்கு "பாவத்தில் இருந்து விடுதலை" உண்டு, நோயிலிருந்து விடுதலை உண்டு, சாபங்களிலிருந்து முறிக்கப்பட்டு விடுதலை உண்டு, சிந்தையில் உண்டாகும் மரண பயத்திலிருந்து விடுதலை உண்டு, சமாதான குறையிலிருந்து விடுதலை உண்டு, ஏழ்மையிலிருந்து விடுதலை உண்டு, பிசாசின் பிடியிலிருந்து நமக்கு விடுதலை உண்டு, இயேசு சிலுவையில் மரித்து இத்தகைய விடுதலைகளைப் பெற்றுத் தந்து மனித வாழ்வுக்கு வலிமை சேர்த்துள்ளார். இரக்கத்தின் அரசை நிறுவினார்.

தான் நிறுவிய இரக்கத்தின் அரசு உலகெங்கும் பரவ வேண்டுமென இயேசு விரும்பினார். அதனால் வலிமைமிகு இறை சந்ததி உருவாகும் என்று நம்பினார். தன்னுடைய 12 திருத்தூதர்களுக்கு தகுந்த பயிற்சியளித்து உலகெங்கும் சென்று இந்த நற்செய்தியை பரப்பச் சொன்னார். 12 திருத்தூதர்கள் 120 நபர்களாக மாறினர், தூய ஆவியாரின் வருகைக்குப்பின் 3000மாக மாறியது, இது 5000மாக பெருகியது, எருசலேம் நகரைவிட்டு படிப்படியாக உலகின் பல நாடுகளுக்கும் இயேசுவின் இறை இரக்க வலிமையின் நற்செய்தி பரவியது. அந்த முதல் நூற்றாண்டிலேயே இயேசுவோடு இருந்த தூய தோமா அவர்களால் நாம்

வாழுகின்ற இந்தியாவிற்கும் நமது தமிழகத்திற்கும் வந்து சேர்ந்தது. அன்று இயேசுவிடமிருந்த இறை இரக்கத்தின் வலிமை திருத்தூதர்களின் வாழ்வின் வலிமையாக மாறியது. தொடர்ந்து அது முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் வாழ்வின் வலிமையாக மாறியது. பின்னும் அது தொடர்ந்து பற்பல நாடுகளுக்கும் பரவி அங்குள்ள கிறிஸ்தவர்களின் வாழ்வின் வலிமையாக மாறியது. அந்த வாழ்வின் வலிகளைத் தாங்கியது, வேதனைகளை இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டது, இரத்த சாட்சிகளாக மரிக்கவும் துணிவைத் தந்தது. இயேசுவின் இறைஇரக்க வலிமைதான் தூய அன்னை தெரசாளை ஏழைகளுக்கும் அனாதை சிறார்களுக்கும் நோயாளிகளுக்கும், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட யாவருக்கும் பணிசெய்ய வலிமை தந்தார் இன்றைக்கு சுமார் 4500 நபர்கள் 130 நாடுகளில் பணியாற்ற வலுவூட்டியது.

இறைவனின் இரக்கமிகு வலிமை பற்பல மறைப்பரப்பு பணியாளர்களை பணிசெய்யத் தூண்டியது. அவ்வாறு பணி செய்ய வந்தவர்கள் தொடங்கி நடத்திவருகின்ற கல்லூரிகள், பள்ளிகள், கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், முதியோர் மறுவாழ்வு இல்லங்கள், சிறுவர் மறுவாழ்வு இல்லங்கள் தொழுநோயாளிகள் இல்லங்கள், தொண்டு நிறுவனங்கள் ஏராளம், ஏராளம். மலைவாழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடி, அம்மக்களுக்கு அவர்களது உரிமைகளை எடுத்துச் சொல்லி அவர்களை வழிநடத்தியதற்காக இன்றைய ஆட்சியாளர்களால் பொய்யாக தேசவிரோத குற்றம் சாட்டப்பட்டு, நீதிக்காகப் போராடி தனது 84 வயதிலும் தளராமல் துணிந்து நின்று செயல்பட்டு சிறையிலேயே மரித்த அருட்தந்தை ஸ்டேன் அவர்களை செயல்பட வைத்ததும் இந்த இறை இரக்கத்தின் வலிமைதான்.

தொழுநோயாளிகளுக்கு தொண்டாற்றிய கிரகாம் ஸ்டெயின் தனது இரண்டு பிள்ளைகளோடு ஜீப்பில் வைத்து உயிரோடு எரித்துக் கொன்றவர்கள் மனதார மன்னிப்பதாக கூறினாரே ஸ்டெயின் அவர்களது மனைவி, அவரிடம் காணப்பட்டது இந்த இறை இரக்கத்தின் வலிமைதான். இயேசுவை ஏற்றுக் கொண்டதால் நாங்கள் பொறுமை காக்கின்றோம், போராடுகிறோம். நாங்கள் பழைய நிலையில் இருந்திருந்தால் இந்நேரம் பல ஆயிரம் தலைகளை வெட்டிச் சாய்த்திருப்போம் என்று மணிப்பூர் மக்கள் இயேசு அன்புக்குப் பணிந்து நிற்பதும் இந்த இறை இரக்கத்தின் வலிமையில் தான். இறைவனிடமிருந்து பெற்ற இந்த இரக்கத்தின் வலிமைதான் நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஊக்கமூட்டும் சக்தியாக, இயேசுவிடமிருந்து பெற்றுக்கொண்ட இந்த இறைஇரக்கத்தில் வலிமை வாயிலாய் நாம் பெற்றுக்கொண்ட மனவலிமையை நம்மோடு வாழ்கிறவர்களுக்கு பகிர்ந்தளித்து மகிழ்வோம், இயேசுவுக்கு சான்று பகர்வோம்.

# ஒளியின் பாதை: உயிர்ப்புக் காலத்தில் ஒரு பக்தி முயற்சி

அருட்தந்தை. அந்தோணி கிறிஸ்டி ச.ச.

## முன்னுரை

உயிர்ப்பின் காலத்தில், கிறிஸ்துவின் உயிர்ப்பையும் அதையொட்டிய நிகழ்வுகளையும், அவை நமக்குத்தரும் பாடங்களையும் சிந்திக்க, தியானிக்க நமக்கு வேறு 14நிலைகள் கொண்ட "ஒளியின் பாதை" அழைப்பு விடுக்கிறது. பெந்தகோஸ்தே திருவிழாவரை உள்ள பாஸ்கா காலத்தில், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் திருப்பலிக்கு முன்போ, அதைத் தொடர்ந்து நாம் இதை தியானித்து செபித்தால் உயிர்ப்பின் மக்களாய் வாழ நமக்கு ஒளி பிறக்கும். நாம் உயிர்ப்பெற்றவர்களாய் வாழ்வதைவிட நம்மைச் சார்ந்தோரையும் இயேசுவில் உயிர்ப்பெற்றவர்களாய் வாழ வரமருள வேண்டித் தியானிப்போம்.

## முதல் நிலை: இயேசு உயிர்த்தெழுகிறார்

சாவை வென்றவராய், தீமையின்மீது வெற்றிக்கொண்டவராய், ஒளியின் பிறப்பிடமாய், எதிர்நோக்கின் சிகரமாய் காட்சியளிக்கும் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** உயிர்ப்பின் நாயகனே, உம் பணியில் நாங்களும் எம் துன்பத் துயரங்களிலிருந்தும், சோதனை சூழல்களிலிருந்தும், பாவத்திலிருந்தும், தீமையிலிருந்தும், இறுதியாய் இறப்பிலிருந்தும் உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கையோடு எங்களை வாழச் செய்யும், ஆமென்.

**(விண்ணுலகில்...தந்தைக்கும், மகனுக்கும்)**

## இரண்டாம் நிலை: வெறுமையானக் கல்லறைக்குமுன் சீடர்கள்

உண்மையை மேற்கொண்டு அடக்கியாண்டு தன் ஆற்றலை நிலைநாட்ட துடித்த சாவும் பாவமும் தோல்வியை தழுவி வெறுமையாய் நின்றதை தியானிப்போம்.

**செபம்:** சாவை வென்ற எம் தலைவா, ஆறாத காயங்களும், மாறாத வடுக்களும் எம் வாழ்வின் பொருளை வெறுமையாக்க துடிக்கும்போது உம் வெறுமையான கல்லறை எமக்கு எதிர்நோக்கு அளிப்பதாக. அனைத்தையும் உம் ஆற்றலால் வென்றுவிடுவோம் என்ற உணர்வோடு எம்மை வாழச்செய்யும். ஆமென்.

## மூன்றாம் நிலை: மதலேனாளுக்குத் தோன்றுகிறார் இயேசு

வெறுமை வீழ்கிறது, விழிகள் திறக்கப்படுகின்றன, போதகரே, ஆண்டவரே, மீட்பரே, நண்பரே, என்றெல்லாம் அழைத்த மதலேனாளும் கிறிஸ்துவை கண்டுக்கொள்ள தவறுகிறார். தன்னையே வெளிப்படுத்தும் உண்மையான கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** கவலைகள் எம் கண்களை மறைக்காது, கணப்பொழுதும் விலகாத உமை என்றும் மறவாது, வரும் சோதனைகள் அனைத்தையும் உறுதியான உள்ளத்தோடு நீர் என்னோடு இருக்கின்றீர் என்ற நம்பிக்கையில் எதிர்நோக்கி செயல்பட ஆசீரளித்தருளும், அமென்.

## நான்காம் நிலை: எம்மாவுஸ் சீடர்களோடு உடன் நடக்கிறார் இயேசு

மனமுடைந்து துணிவிழந்த சீடர்களை நிர்கதியாய் விட்டுவிடாது உடனிருந்து, உடன் நடந்து தன்னையே வெளிப்படுத்திய கிறிஸ்துவிடம் எம்மோடும் உடன்நடக்கின்ற நம்பிக்கையை எம்மில் வளர்த்திட தியானிப்போம்.

**செபம்:** வாக்களித்தபடியே எம்மை விட்டு விலகாத உயிர்த்த கிறிஸ்துவே, எம் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களிலும், மனம் மகிழச்செய்யும் தருணங்களிலும் நீர் உடன் நடக்கின்றீர் என்பதை மறவாமல் வாழும் வரம்தாரும். ஆமென்.

## ஐந்தாம் நிலை: அப்பம் பிடுகையில் தன்னை வெளிப்படுத்தும் இயேசு

அப்பம் பிடுவதும் ஒருமனப்படுவதும் உயிர்ப்பின் மக்களின் அடையாளங்கள் என்று எண்பிக்கும் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** உயிரின் உணவாய் வரும் உயிர்த்த கிறிஸ்துவே, ஆன்ம உணவாய் நம்பிக்கையில் தளர்ந்த அந்த சீடர்களுக்கு நம்பிக்கையில் உரமூட்டினீர். தோல்விகளாலும், தொய்வுகளாலும் மனமுடைந்து இருக்கும் எங்களுக்கு ஆன்ம உணவாய் வாரும். உமது ஆற்றலாலும் அன்பாலும் நாங்களும் நம்பிக்கையிழந்த பலருக்கு வாழ்வில் ஒளியூட்ட வரம் தாரும். ஆமென்.

## ஆறாம் நிலை: மூடிய அறையில் சீடர்களுக்கு தோன்றுகிறார் இயேசு

முடிந்துவிட்ட கதையாய் தங்கள் வாழ்வை கண்ட சீடர்களுக்கும் புத்தொளி தந்து புதுவாழ்வை காணும்படி அவர்களின் கண்கள் திறக்கும் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** புதுவாழ்வை எமக்களித்த உயிர்த்த கிறிஸ்துவே, வீணான முயற்சிகள், விரயமான காலம், விடியாத நாட்கள் என்று நாங்கள் புலம்பித்தவிக்கும் வேளைகளில் எம் கண்களை திறந்து நீர் எமக்கென வைத்திருக்கும் திட்டங்களில் நம்பிக்கை வைத்து புதுவாழ்வை கண்டுக்கொள்ளும் வரம் தாரும். ஆமென்.

## ஏழாம் நிலை: பாவங்களை மன்னிக்கும் பணித் தருகிறார் இயேசு

பலம் இழந்தவர்கள் மீண்டும் உறுதிப்பெற்று எழவும், மனமுடைந்தோர் பலரை உறுதிப்பெறச் செய்யவும், சீடர்களுக்கு மன்னிக்கும் ஆற்றலையும் பணியையும் அளிக்கிறார் இயேசு, மன்னிக்கும் மீட்பராம் கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** என் பாவங்கள் உம் உறவைப் பாதிக்காது, உம்மில் எம்மை இணைக்கத் திருவுளமானவரே, உயிர்ப்பின் வாழ்வு ஒளியின் வாழ்வு, உண்மையின் வாழ்வு, எதிர்நோக்கின் வாழ்வு என்பதை முழுமையாய் உணர்ந்து, மனஅமைதியோடு வாழும் வரமருளும், ஆமென்.

### எட்டாம் நிலை: தோமாவின் நம்பிக்கையை ஆழப்படுத்துகிறார் இயேசு

அறிகுறிகளும் அடையாளங்களும் இல்லாமல் நம்பமாட்டேன் என்று உயிர்ப்பிலே சந்தேகித்த தன் சீடர் தோமாவைத் தேற்ற, வலுப்படுத்த, தோன்றும் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** என்னிலே நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான் என்று எமக்கு நிலைவாழ்வை அளித்த உயிர்ப்பின் ஆண்டவரே, எமது வாழ்வின் சூழல்களில் உம் வார்த்தைகளையும் வாக்குறுதிகளையும் மறந்துவிடாமலும் அவற்றின்மீது நம்பிக்கை இழந்துவிடாமலும் இருக்க எமக்கு அருள்தாரும். ஆமென்.

### ஒன்பதாம் நிலை: திபேரியாக கடலில் தோன்றுகிறார் இயேசு

விடியற்காலை விடியாத மனங்களோடு முடியாது என்ற எண்ணத்தோடு கடல்மிதிருந்த சீடரை விடியலின் ஒளியாய், வெற்றியின் ஊற்றாய், புத்தொளியோடு சந்திக்கும் வெற்றி வீரராம் கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** உண்மையான நம்பிக்கையின் ஒளி சுடர்விடும்போது விடியலின் வரவு தெளிவாய் தெரிந்துவிடும். உமது உயிர்ப்பின் உள்ளொளி பெற்றவர்களாய் வாழ்வின் சோதனைகளை சோர்வின்றி சந்திக்கவும், நம்பிக்கையோடு எதிர்கொள்ளும் வரமருளும். ஆமென்.

### பத்தாம் நிலை: பேதுருவின் முதன்மை பொறுப்பை உணர்த்துகிறார்

"என் ஆடுகளை மேய்" என்று பேதுருவை பணித்து திருச்சபையை ஒருடலாய் உருவாக்கும் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** சிதறிப்போன ஆடுகளாய் இருந்த தன் சீடர்கள் அனைவரையும் ஒரு மந்தையாய் கூட்டிச்சேர்க்கும் பணியை பேதுருவிடம் ஒப்புக்கொடுத்த உயிர்த்த கிறிஸ்துவே, எமது நம்பிக்கை வளரும் இல்லம் என்பதை உணர்ந்து ஒருவரையொருவர் அன்பு செய்யவும், ஒற்றுமையும், ஒருமனப்பாட்டையும் வளர்க்கவும் எம்மால் முடிந்ததை செய்யும் ஆற்றல்தாரும். ஆமென்.

### பதினோராம் நிலை: உலகெங்கும் தம் சீடரை அனுப்புகிறார் இயேசு

உலகெங்கும் போய் நற்செய்தியை அறிவியுங்கள் என்று தனது சீடர்களுக்கு புதியதொரு பணியை தந்து அனுப்புகிறவராம் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** உம் மீட்பு உலகனைத்திற்கும் சென்றுச்சேர திருவுளமான எம் இறைவனே, உம் சீடர்களுக்கு நீர் அன்று அளித்த இப்பணி, திருமுழுக்கிலே உம்மில் இணையும் எங்கள் ஒவ்வொருவருக்கும் நீர் தந்துள்ள பணி என்பதை நாங்கள் உணரவும், உமது உயிர்ப்பினால் உந்தப்பட்டு எம் வார்த்தையாலும் வாழ்வாலும் உமது நற்செய்தியை அறிவிக்கும் துணிச்சல் தாரும். ஆமென்.

**பனிரெண்டாம் நிலை: விண்ணகம் எழுகிறார் இயேசு**

நான் என் தந்தையிடம் செல்லுகிறேன் என்று கூறி நமக்காய் தந்தையின் வலப்பக்கம் வீற்றிருக்கும் உயிர்த்த கிறிஸ்துவை தியானிப்போம்.

**செபம்:** எல்லாம் நிறைவேறிற்று என்ற நிறைவோடு தந்தையின் வலப்பக்கம் வீற்றிருக்கும் உயிர்ப்பின் ஆண்டவரே, நாங்களும் எம் வாழ்வில் தந்தையின் சித்தமறிந்து அதை நிறைவேற்றிடும் ஆவலோடு வாழும் வரம்தாரும். ஆமென்.

**பதிமூன்றாம் நிலை: அன்னை மரியாளோடு ஆவிக்காய் காத்திருக்கின்றனர்**

கிறிஸ்துவின் பணி முடிந்து தங்கள் பணி தொடங்கவுள்ளதை அறிந்து கிறிஸ்துவின் கட்டளைக்காய் காத்திருக்கும் முதல் கிறிஸ்தவர்களாய் அன்னை மரியாளையும் சீடர்களையும் தியானிப்போம்.

**செபம்:** நான் உங்களுக்கு ஓர் துணையாளரை அனுப்புவேன் என்று கூறிச்சென்ற உயிர்த்த கிறிஸ்துவே, உம் ஆவிக்காய் காத்திருக்கும் அன்னையையும் சீடர்களையும் கண்டு உம்மை போற்றுகின்றோம். அவர்களைப் போலவே உமது வார்த்தையில் முழு நம்பிக்கை கொண்டு, உம் ஆவியின் வரங்களுக்காக ஏங்கும் மனதை எங்களுக்குத் தாரும். ஆமென்.

**பதிநான்காம் நிலை: வாக்களிக்கப்பட்ட ஆவியை அனுப்புகிறார்**

சீடர்களோடும் மரியன்னையோடும் இதுவரை உடன் நடந்த கிறிஸ்து உயிர்த்த தம் மகிமையில் அருள்வழங்கும் ஆவியாய் அவர்கள்மீது இரங்கியதை தியானிப்போம்.

**செபம்:** ஆவியிலும் உண்மையிலும் வழிபட எம்மை அழைக்கும் உயிர்ப்பின் ஆண்டவரே, அருள் வழங்கும் ஆவியை எம்மீது நிறைவாய் பொழிந்தருளும். எமது வாழ்வே ஒரு நற்செய்தி அறிவிப்பாய் அமைந்து, உமது உயிர்ப்பின் ஒளியை எம்முள் கொண்டு, அதே ஒளியின் பாதை வழி நடந்து பிறரையும் வழிநடத்த வரம் தாரும். ஆமென்.

## திருஅவைச் செய்திகள்

சகோ. சூசைராஜ் ச.ச.

### 1. போதைப்பொருள் தொடர்புடைய வன்முறைகள் குறித்து காணொளிச் செய்தி

ரொசாரியோ நகரில் இணக்க வாழ்வை உருவாக்க அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்தும் திருத்தந்தையின் காணொளிச் செய்தி.

**கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்**

அர்ஜென்டினா நாட்டின் ரொசாரியோ என்னும் நகரில் கடந்த சில வாரங்களாக போதைப்பொருள் தொடர்புடைய வன்முறைகள், ஊழல், சட்டவிரோத பணபரிமாற்றங்கள் ஆகியவை இடம்பெற்று வருவது குறித்து ஆழ்ந்த கவலையை வெளியிட்டு அந்நகருக்கு காணொளிச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். போதைப்பொருள் கடத்தல்காரர்களால் கொலைகளும் ஏனையக் குற்றங்களும் ரொசாரியோ நகரில் இடம்பெற்றுவரும் நிலையில் போதைப்பொருள்களின் தேவையையும் விநியோகத்தையும் கட்டுப்படுத்த போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென தன் காணொளிச் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். போதைப்பொருளுக்கு அடிமையானோர் மற்றும் பலியானோரின் குடும்பங்கள், போதைப்பொருட்களால் நோயுற்றோர், போதைப்பொருட்களுக்கு அடிமையானோர் என அனைவருடனும் தலத்திரு அவை நடைபோட்டு அவர்களை குணப்படுத்த உரிய உதவிகளை ஆற்றவேண்டுமென தன் செய்தியில் விண்ணப்பித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

### 2. வெனிஸ் நகரில் திருத்தந்தையின் ஒருநாள் திருத்தூதுப்பயணம்

"என் சொந்த கண்களோடு," என்று தலைப்பிடப்பட்டுள்ள வெனிசின் வத்திக்கான் கலையரங்கம் மனித உரிமைகள் மற்றும் வறியோருக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

**கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்**

இரண்டான்டிற்கு ஒருமுறை இத்தாலியின் வெனிஸ் நகரில் நடத்தப்படும் கலைக்கண்காட்சியில் பங்குபெறும் வத்திக்கான் கலையரங்கத்தை பார்வையிடுவதற்கென ஏப்ரல் மாதம் 28ம் தேதி அந்நகர் செல்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். அன்று காலை ஹெலிகாப்டரில் வெனிசிலுள்ள Giudecca பெண்கள் சிறைச்சாலையின் உள்வளாகத்தில் சென்றிறங்குவார். முதலில் வெனிஸ் நகர முதுபெரும் தந்தை Francesco Moraglia அவர்களாலும், இத்தாலிய அதிகாரிகளாலும்

காலை 8 மணிக்கு வரவேற்கப்படும் திருத்தந்தை, அதன்பின் அச்சிறைச்சாலை வளாகத்திலேயே ஏறத்தாழ 80 பெண்கைதிகளை சந்திப்பார். அந்த சிறைச்சாலையின் கோவிலிலேயே கலைஞர்களை சந்தித்தப்பின் 60வது அனைத்துலகக் கலைக்கண்காட்சிக்குச் சென்று, அங்குள்ள வத்திக்கான் கலையரங்கத்தைப் பார்வையிடுவார். "என் சொந்த கண்களோடு," என்று தலைப்பிடப்பட்டுள்ள இந்த கலையரங்கம் மனித உரிமைகள் மற்றும் வறியோருக்கென அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. கலாச்சாரங்களிடையேயான உரையாடல்களை ஊக்குவிக்கும் நிலைகளில் புறக்கணிக்கப்படும் மக்களைக் குறித்து உலகின் கவனத்தைத் திருப்புவதாக இந்த வத்திக்கான் கலையரங்கம் செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 3. கர்தினால் சாக்கோ : இயேசு நமக்கு அதிகம் அதிமாகத் தேவைப்படுவார்

எத்தகைய சவாலான நேரங்களிலும் துன்ப வேளைகளிலும் இயேசு நம்மோடு இருக்கிறார் என்பதை மனதில்கொண்டு செயல்படுவோம்.

**கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்**

ஒழுக்கநெறிக் கோட்பாடுகளைவிட தனிமனித இலாபங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டும், தடைச்செய்யப்பட்டவைகள் நியாயப் படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டும், இலஞ்சஊழல் சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டும் வரும் இன்றைய காலக்கட்டத்தில் இயேசுவின் இருப்பு அதிகம் அதிகமாக நமக்குத் தேவைப்படுகிறது என்றால் கல்தேய வழிபாட்டு முறை முதுபெரும் தந்தை கர்தினால் லூயிஸ் ரபேல் சாக்கோ. ஒழுக்கரீதிக் கோட்பாடுகள் மதிப்பிழந்து வரும் இன்றையக் காலத்தில் நம்மை உண்மை, அன்பு, நல்லெண்ணம், மாண்பு மற்றும் அருளை நோக்கி வழிநடத்திச் செல்ல இயேசு நமக்கு அதிகம் அதிகமாகத் தேவைப்படுகிறார் என புனித வாரத்தையொட்டிய செய்தியில் அழைப்புவிடுத்துள்ள கர்தினால் சாக்கோ அவர்கள், நம் மனங்களையும் இதயங்களையும் புனிதப்படுத்த வேண்டிய காலமிது என மேலும் கூறியுள்ளார்.

## 4. கர்தினால் போ: அமைதிக்காக திருத்தந்தையுடன் இணைந்து செபிப்போம்

நம் தொடர் செபங்களில் அப்பாவி மக்களின் அழுகுரல்களையும், ஒடுக்கப்பட்டோரின் கண்ணீரையும் மக்களின் சிதறியக் கனவுகளையும் கண்டும் காணாமல் சென்றுவிட முடியாது.

**கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்**

அமைதிக்கான திருத்தந்தையின் ஆழமான அழைப்பில் நாமும் ஒன்றிணைந்து ஒருமைப்பாட்டில் முழந்தாள்படியிட்டு, நம்பிக்கை மற்றும்

இணக்க வாழ்விற்காக இறைவேண்டல் செய்வோம் என மியான்மார் மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார் கர்தினால் சார்லஸ் முவாங்போ. வரவிருக்கும் இயேசு உயிர்ப்பு திருவிழாவுக்கு தயாரிப்புச் செய்தி ஒன்றை, "அமைதியின் விடியலை அணைத்துக்கொள்வோம்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள மியான்மார் ஆயர்பேரவைத் தலைவர் கர்தினால் முவாங்போ அவர்கள் 2021ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்தே கடந்த மூன்றாண்டுகளாக உள்நாட்டு மோதல்களால் மக்கள் அனுபவித்துவரும் துன்பங்களை தன் செய்தியில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

## சுடர் வாசகர் போட்டி - 108 சரியான விடைகள்

1. திருத்தந்தை
2. "உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவாராய் இருப்பது போன்று நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்"
3. மகதல மரியா, யோவன், பேதுரு
4. ஒலிவ மலையில் துவங்கி எருசலேமில் நுழைகிறார்.
5. 13 இடங்களில்
6. அவர்கள் உள்ளத்தில் பதிப்பதாக
7. வாழ்வு, ஒளி
8. ஆண்டவரை வழிபட அழைக்கின்றது
9. பொது நன்மைக்காக உழைக்கும் அனைவரும்
10. நித்திய வாழ்வுக்கான தயாரிப்பை மேற்கொள்வதற்கான அழைப்பு
11. கழுதை மீது அமர்ந்து
12. புனித மாங்க்ரோவேகோ துரீபியுஸ்
13. மரியாவின் கனவர் புனித யோசேப்பு
14. மேசே
15. இயேசு

## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mr. A. Gnanasekaran, Katpadi

Sr. Florant Mary, Salem

Mr. Antonysamy, Bangalore

## சுடர் வாசகர் போட்டி - 109

1. "இயேசு நமக்கு அதிகம் அதிகமாக தேவைப்படுவார்" கூறியது யார்?
2. செபமாலை அன்னை திருவிழாவை அக்டோபர் மாதம் கொண்டாடச் செய்த திருத்தந்தை யார்?
3. இயேசு கைது செய்யப்பட்டபோது ஆடையின்றி ஓடியவர்.......என்பது மரபு?
4. "ஏழைகளின் வக்கீல்" என்று அழைக்கப்படுபவர் யார்?
5. ஈட்டி போன்று விரைவாக செயல்படுபவராக திகழ்ந்த புனிதர் யார்?
6. போலந்து நாட்டின் பாதுகாவலர் யார்?
7. "ஆகட்டும்" என்ற வார்த்தையை மையப்படுத்திய விழா எது?
8. ஆண்டவர் தனது இறைஇரக்கத்தை எந்த புனிதைக்கு வெளிப்படுத்தினார்?
9. வெனிஸ் வத்திக்கான் கலையரங்கம் எதற்காக அர்ப்பணிக்கப்பட்டது?
10. இயேசு யாருடைய கையில் மோதிரம் அணிவித்து "துணிவுக் கொள்" என்று கூறினார்?
11. கப்புச்சின் துறவற சபையின் முதல் வேதசாட்சி யார்?
12. கிழக்கு கத்தோலிக்க ஆர்த்தடாக் ஆலயத்தின் பாதுகாவலர் யார்?
13. பாழடைந்த தேவாலயங்களை மீட்டெடுக்கும் பணியை மேற்கொண்ட புனிதர் யார்?
14. புனித தனிஸ்லாசுக்கு யார் எந்த இடத்தில் புனிதர் பட்டம் கொடுத்தார்?
15. ஆண்டவரின் பிறப்பின் அறிவிப்பு விழா எந்த ஆண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது?

## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ.100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

தீபகம்
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்: ..................................
முகவரி: ..................................
..................................
..................................
..................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

தொழிலாளர் புனித யோசேப்பு
புனித அத்தனாசியுஸ்
புனிதர்கள் பிலிப்பு, யாக்கோபு
பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு
ஆண்டவருடைய விண்ணேற்றம் பெருவிழா
பாத்திமா நகர் புனித கன்னிமரியா
புனித மத்தியா திருத்தூதர் விழா
புனித முதலாம் ஜான்
மரியா திருஅவையின் அன்னை
புனித கிறிஸ்டோபர் மகல்லானஸ்
காசியா நகர் புனித ரீத்தா
தூய்மைமிகு மூவொரு கடவுள் பெருவிழா
காண்டர்பரி நகர்ப் புனித அகுஸ்தின்
புனித கன்னிமரியா எலிசபெத்தைச் சந்தித்தல் விழா

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

புனித பிலிப்பு மற்றும் யாக்கோபு வாழ்வுதரும் பாடம்
சூசைத்தந்தை நம் குடும்ப வாழ்வின் வழிகாட்டி
செபமாலை அன்னைத்தந்த வெற்றிமாலை
திருஅவைச் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஏப்ரல் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# ஏப்ரல் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | தி | | தி.ப. 2: 14,22-33 | யோவா 28: 8-15 |
| 2 | செ | | தி.ப. 2: 36-41 | யோவா. 20: 11-18 |
| 3 | பு | | தி.ப. 3: 1-10 | லூக். 24: 13-35 |
| 4 | வி | | தி.ப. 3: 11-26 | லூக். 24: 35-48 |
| 5 | வெ | | தி.ப. 4: 1-12 | யோவா. 21: 1-14 |
| 6 | ச | | தி.ப. 4: 13-21 | மாற்கு 16: 9-15 |
| 7 | **ஞா** | **இறை இரக்கத்தின் ஞாயிறு** | **I.** தி.ப. 2: 32-35<br>**II.** 1யோவா. 5: 2-6 | யோவா. 20: 19-31 |
| 8 | தி | ஆண்டவருடைய பிறப்பின் அறிவிப்பு பெருவிழா | எசா. 7: 10-14, 8:10<br>எபி. 10: 4-10 | லூக். 1: 26-38 |
| 9 | செ | | தி.ப. 4: 32-37 | யோவா. 3: 7-15 |
| 10 | | | தி.ப. 5: 17-26 | யோவா. 3: 16-21 |
| 11 | வி | புனித ஸ்தனிஸ்லாஸ் | தி.ப. 5: 27-33 | யோவா. 3: 31-36 |
| 12 | வெ | | தி.ப. 5: 34-42 | யோவா. 6: 1-15 |
| 13 | ச | புனித முதலாம் மார்ட்டின் | தி.ப. 6: 1-7 | யோவா. 6: 16-21 |
| 14 | **ஞா** | **பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு** | **I.** தி.ப. 3: 13-15,17-19<br>**II.** 1யோவா. 2: 1-5 | லூக். 24: 35-48 |
| 15 | தி | | தி.ப. 6: 8-15 | யோவா. 6: 22-29 |
| 16 | செ | | தி.ப. 7: 51-8: 1 | யோவா. 6: 30-35 |
| 17 | பு | | தி.ப. 8: 1-8 | யோவா. 6: 35-40 |
| 18 | வி | | தி.ப. 8: 26-40 | யோவா. 6: 44-51 |
| 19 | வெ | | தி.ப. 9: 1-20 | யோவா. 6: 52-59 |
| 20 | ச | | தி.ப. 9: 31-42 | யோவா. 6: 60-69 |
| 21 | **ஞா** | **பாஸ்கா காலத்தின் 4ம் ஞாயிறு**<br>**இறை அழைத்தல் ஞாயிறு** | **I.** தி.ப. 4: 8-12<br>**II.** 1யோவா. 3: 1-2 | யோவா. 10: 11-18 |
| 22 | தி | | தி.ப. 11: 1-18 | யோவா. 10: 11-18 |
| 23 | செ | புனித ஜார்ஜ், புனித அடால்பெர்ட் | தி.ப. 11: 19-26 | யோவா. 10: 22-30 |
| 24 | பு | சிக்மரிங்கன் நகர்ப் புனித பிதேலிஸ் | தி.ப. 12: 24-13: 5 | யோவா. 12: 44-50 |
| 25 | வி | புனித மாற்கு நற்செய்தியாளர் விழா | 1பேதுரு 5: 5-14 | மாற்கு 16: 15-20 |
| 26 | வெ | | தி.ப. 13: 26-33 | யோவா. 14: 1-6 |
| 27 | ச | | தி.ப. 13: 44-52 | யோவா. 14: 7-14 |
| 28 | **ஞா** | **பாஸ்கா காலத்தின் ஐந்தாம் ஞாயிறு** | திப. 9: 26-31<br>1யோ. 3: 18-24 | யோவா. 15: 1-8 |
| 29 | தி | சியென்னா நகர்ப் புனித கத்ரீன் | திப. 14: 5-18 | யோவா. 14: 21-26 |
| 30 | செ | புனித ஐந்தாம் பயஸ் | திப. 14: 19-28 | யோவா. 14: 27-31 |

## தீபகம்

நடத்தும்

# VBS

ஆசிரியர்களுக்கான
இலவச பயிற்சி பாசறை

ஏப்ரல்
06
2024
9.00 am
to
4.00 pm

TO SHARE THE LIGHT

**இதில் பங்கேற்று பயன்பெறுமாறு ஆசிரியர்களை அன்போடு வரவேற்கிறோம்.**

---

TO SHARE THE LIGHT

## தீபகம் நடத்தும்

**கலை வழி - இறைமொழி** **இசை வழி - இறைமொழி**

### தீபகக் கலைக்குழுக்கள்

சென்னை மாநிலம் முழுவதிலுமுள்ள 5 இடங்களில் கலைக்குழுக்கள் உருவாகுகின்றன. **பாடல், நடனம், இசை, நாடகம்** மற்றும் பல பயிற்சிகள் **இலவசமாக** அளிக்க முன்னெடுத்துள்ளோம். சென்னை (பேசின் பாலம்), ஜோலார்பேட்டை, வீரளூர், தென்னங்குடி, கெடிலம் என்ற 5 இடங்களை மையமாகக் கொண்டு ஒவ்வொரு இடத்திலும் ஒரு கலைக்குழுவைத் துவங்கி பயிற்சி அளிக்க இருக்கின்றோம். இதில் விருப்பமுள்ளவர்கள் கலந்துக் கொண்டு பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் விபரங்களுக்கு : **தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

+91 9385201453 Deepagam Don Bosco




பங்குகளுக்கிடையேயான
VBSகொண்டாட்டம்...

ஏப்ரல் 28
2024 ஞாயிறு

உங்கள் பங்கில் VBSல் கலந்துக் கொண்டு போட்டிகளில் பங்கேற்ற பிள்ளைகளின் திறமைகளை சென்னை முழுவதும் உள்ள பங்குகளுக்கு அறிமுகப்படுத்த ஓர் அறிய வாய்ப்பு

வாருங்கள்...
மகிழ்ந்து கொண்டாடுங்கள்...

+91 9385201453

# பலிப்பீட சிறார்கள் முகாம்

மே 6-7 2024



அனுமதி இலவசம்

இடம் :
தொன் போஸ்கோ - எண்ணூர்

விபரங்களுக்கு
+91 9385201453

அன்பு நண்பர்களே, தீபகம் மேற்கொள்ளும் அனைத்து இறைப்பணிக்காகவும் உங்கள் தாராள நன்கொடைகளை இந்த QR கோடை ஸ்கேன் செய்து இதன் மூலம் அனுப்பி வைக்க அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

013805300007612@SIBL0000138
SISS A/C DEEPAGAM
THE CITADEL, 45, Landons Road
Kilpauk, Chennai - 600010

www.upiqrcode.com

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
+91 9385201453 Deepagam Don Bosco

தயாரிப்பு : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : **கபிரியேல் மேரி** அட்டைப்பட வடிவமைப்பு : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
தயாரிப்பில் மேற்பார்வை : **சாண்டோ, ஈசாக்** அச்சிட்டோர் : **சிகா அச்சகம்,** கீழ்ப்பாக்கம், சென்னை - 10